விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 041 வள்ளுவர் ஆண்டு 2054 தை 15 ஞாயிற்றுக்கிழமை (29.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிற்வுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## தேர்தல் ஆணைக்குழுவின் மற்றொரு உறுப்பினருக்கு
### கொலை மிரட்டல்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம்.எம்.மொஹமட்டுக்கு பதவியை இராஜினாமா செய்யுமாறு நேற்று முன்தினம் இரவு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கொலை மிரட்டல் வந்த எஸ்.பி. திவரத்னவுக்கு மீண்டும் ஒரு முறை குறுஞ்செய்தி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட உறுப்பினர்களான 19

## வடக்கில் இராணுவ வசமுள்ள 100 ஏக்கர் காணியை விடுவிக்குக
### ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட 100 ஏக்கர் தனியார் காணிகளை உரிய மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய குறித்த காணி பகிர்ந் தளிப்பு நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க வடமாகாணத்தின் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பெப்ரவரி மாதம் 11ஆம் 19

# அரசின் வேலைத்திட்டங்களை சீர்குலைத்தால்
# நாடு நெருக்கடிக்குள் சிக்குவதை தடுக்க முடியாது



## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(அநுராதபுரம்)

- 2020ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரிச்சலுகையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்.
- யாருக்கும் தலைவணங்காத நாட்டை உருவாக்கி வருகிறோம்.
- பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் குறைவடையும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### பொருளாதார நெருக்கடி
## எரிமலை போல் விரைவில் வெடிக்கும்

(கொழும்பு)

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தினால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. கடன் பெறல், இருக்கும் வளங்களை விற்றல் ஆகியவை ஜனாதிபதியின் பொருளாதார கொள்கையாக உள்ளது.

பொருளாதார நெருக்கடி வெகுவிரைவில் எரிமலைபோல் வெடிக் 19

## நாட்டில் 12 மணி நேர மின்வெட்டுக்கு அனுமதி

(கொழும்பு)

நாட்டில் 12 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு நடைமுறைப்படுத்த அனுமதி கிடைத்தது.

இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கான நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கு வழங்கப்படும் மானியங்களை நிறுத்த வேண்டும் 19

### ராஜபக்ஷக்களின் குடும்ப ஆதிக்கத்தால்
## நாடு சூனியமாக்கப்பட்டது
### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் குடும்ப ஆதிக்கத்தால் நாடு சூனியமாக்கப்பட்டதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, 19

### இஸ்லாமிய நாடுகளின்
## ஆதரவையும் முதலீட்டையும் இலங்கை நாடுகின்றது
### அமைச்சர் அலி சப்ரி

(ஜெட்டா)

இலங்கை, தமது வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேற இஸ்லாமிய நாடுகளின் ஆதரவையும் முதலீட்டையும் நாடுவதாக, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜெட்டாவில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமலம் திருமண சேவை

விமலம் திருமணசேவை தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவை எனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தாராளமாக உள்ளன.

தொடர்பு : இலங்கை - 077 240 9276
கனடா - 001 437 244 6737 (14339)

வாழ்வில் முன்னேறுவதற்கு
நெஞ்சில் தைரியமும்
உதட்டில் உண்மையும் இருந்தால் போதும்

## விற்பனைக்கு

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மையில் 260 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
யாழ். இந்து கல்லூரிக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ். மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 6 பரப்பு காணியும், வேம்படி பாடசாலைக்கு அண்மையில் 14 பரப்புக் காணியும், யாழ். பலாலி வீதிக்கு அண்மையில் 6 பரப்பு காணியும், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு அருகில் 6 1/2 பரப்புக் காணியும், யாழ் காந்தி வீதியில் 6 பரப்பு காணியும், யாழ். பலாலியில் 100 பரப்பு காணியும், யாழ் நிலாவரையில் 70 பரப்பு காணியும், யாழ்(KKS) காங்கேசன்துறையில் 160 பரப்பு காணியும், காரைநகர் மேற்கு வீதியில் 40 பரப்பு காணியும், யாழ் கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ் பலாலி வீதி திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 40 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

இல. 183, காலி வீதி,
வெள்ளவத்தை.

இல. 185, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

077 723 2535
கனகசபை தர்மகுலசிங்கம் (C-5863)

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பிரபல வங்கியின் பொது காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (14430)

077 008 3491

## வீடு வாடகைக்கு உண்டு

- 2 பேருக்குரிய சிறியவீடும்
- நிறுவனங்களுக்குரிய பெரிய வீடும் ( 3மாடி 10 றூம்ஸ் 10 வாகனங்கள் விடக்கூடியது )
- படிக்கும் மாணவர்களுக்குரிய அறைகளும் வாடகைக்கு உண்டு
- நாளாந்த வாராந்த நவீன ஆடம்பர வீடுகள், அறைகள் உண்டு (14439)

077 345 0039, 077 348 0039

## கணிதம்

தரம் 6 முதல் G.C.E (O/L) வரையான
தனி/குழு வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
மேலதிக விபரங்கட்கு (14438)

076 676 9675
ஆடியபாதம் வீதி, நல்லூர்.

## 0+ சிறுநீரகம் தேவை

லண்டனில் வசிக்கும் வர்த்தகர் ஒருவருக்கு 0+ சிறுநீரகம் தேவை (50 வயதுக்கு உட்பட்டவர்கள் கொடுக்க விரும்புவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.) (14439)

077 348 0039
Whatsapp
0094 773 333 233

## காணி விற்பனைக்கு

பத்து பரப்பு காணி இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

லேலண்ட் கொம்பனி நாவற்குழி அருகாமை வீதியில் A9 றோட்டில் இருந்து 300 மீற்றர் தூரம் நல்ல தண்ணீர், நல்ல சூழல், நிலப்பரப்பு (14441)

077 638 5683
076 755 8606


## சடலம் மீட்பு

(கொழும்பு)

தலவாக்கலை, மேல்கொத்மலை நீர்த்தேக்க பகுதியில் தண்ணீரில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்றை தலவாக்கலை பொலிஸார் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் பத்தனை மவுண்ட் வர்ணன் பகுதியை சேர்ந்த சுப்பிரமணியம் சதீஸ் (வயது 27) என அடையாளம் கண்டுள்ளனர்.

(ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127





எங்கள் குல
இதய தெய்வங்களின்
ஓராண்டு
நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி
மகாலிங்கம் (மகான்)
(முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதியும், யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேருந்து கம்பனிகளின் இணையத்தின் திடீர் பரிசோதகரும், மேற்பார்வையாளரும்)

தோற்றம் 09..08.1945
மறைவு 30.01.2022

அமரர் மகாலிங்கம்
தவமணி

தோற்றம் 12.05.1947
மறைவு 07.02.2022

விருட்சமென நீங்களிருந்து
விழுதென எம்மை
ஆக்கிய - எங்கள்
குல இதய
தெய்வங்கள் - நீங்கள்
இல்லா மனை
பொலிவிழந்து போனதுவே!
மண்ணைவிட்டு மறைந்து
விண்ணுலகம் சென்றாலும்
கண்ணைவிட்டு மறையாது
உங்கள் அன்பான
நினைவுகள் - என்றும்
உங்கள் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம். (14433)

பட்டினசபை லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலாலியை சுற்றியுள்ள காணிகளை விடுவிப்பது ஆபத்தானது-சரத் வீரசேகர



(கொழும்பு)

யாழ்ப்பாணம் பலாலியைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்க முன் ஆலோசனை பெறவேண்டும் என சரத் வீரசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேகர இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

பலாலியைச் சூழவுள்ள காணிகளை பொது மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் பாதுகாப்புப் படைத் தலைவர்களிடம் ஆலோசனை பெறுமாறு கோரியுள்ளார்.

அவ்வாறு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளாமல் குறித்த பகுதிகளில் உள்ள காணிகளை பகிர்ந்தளிப்பது அபாயகரமானது எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஆசிரியர் நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் விரைவில்

(கொழும்பு)

அனைத்து வகையான பாடசாலைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட சில முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய, புதிய ஆசிரியர்களை உள்வாங்குவதற்கு போட்டிப் பரீட்சைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த விண்ணப்பப்படிவங்களை applications.doenets.lk/exams என்ற இணையத் தளத்தில் பெற முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## மசகு எண்ணெய் விலையில் மாற்றம்

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, டப்ளியூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.68 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 86.66 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை, இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை சற்று அதிகரிப்பை பதிவு செய்து 3.1 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

## அமைச்சுக்களின் புதிய செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் இரு அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளராக சூலானந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக டபிள்யூ. சமரதிவாகர நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த நியமனங்கள் ஜனவரி 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## சார்ள்ஸ் அனுப்பிய இராஜினாமாவை ஜனாதிபதி ரணில் ஏற்கவில்லை

### ஜனாதிபதி அலுவலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பிஎஸ்.எம் சார்ள்ஸ் அனுப்பிய இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கவில்லை என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி கடந்த வாரம் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் ஜனவரி 25 அன்று தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்ததுடன், அவரது இராஜினாமா கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

நாடு முழுவதும் பெருகிவரும் போதைப்பொருள் பரவலை கட்டுப்படுத்த போவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருளை கட்டுப்படுத்த தேவையான எந்த தீர்மானத்தையும் எடுக்குமாறு ஜனாதிபதி தனக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால தலைமுறையை அழிவுக்கு உட்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் கோருகிறேன். அவர்கள் இதனை நிறுத்தவில்லை என்றால், எந்த வழியிலாவது அதனை தடுத்து நிறுத்த நட வடிக்கை எடுப்பேன்.

போதைப் பொருள் விற்பனையாளர்கள், பாலியல் குற்றவாளிகள் மற்றும் கொலையாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு.


போதைப்பொருள் பரவல் காரணமாக நாட்டில் பல இடங்களில் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவற்றை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும்.

இப்படியான குற்றச் செயல்களில் ஈடுபடும் அனைவரும் அவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அவர்கள் எங்காவது மறைந்திருந்து அவற்றை செய்து வந்தால், அனைத்தையும் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாருக்கு 118 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் குற்றச் செயல்களை ஒடுக்குவதற்கு பொதுமக்களின் உதவி மிகவும் முக்கியமானது எனவும் டிரான் அலஸ் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## தேர்தலை எதிர்கொள்ள பெரமுன தயார்

### மகிந்த ராஜபக்ஷ பகிரங்க அறிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள சிறிலங்கா பொது ஜன பெரமுன தயாராக இருப்பதாக அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் விகாரைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பின்னர், தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமது கட்சி பலமாக இருப்பதாகத் தெரிவித்தார். (நி)

## அரசின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள்-பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்திற்கு மக்களாணை கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், வாக்கு கேட்டு மக்கள் மத்தியில் செல்ல முடியாத காரணத்தினால் மக்களின் அடிப்படை உரிமையை முடக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார் என குற்றம் சாட்டினார்.

தேர்தலை பிற்போட மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் படுதோல்வியடைந்துள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நிச்சயம் இடம்பெறும்.

இதேவேளை தேர்தல் தொடர்பாக பொய்யான செய்திகளை மாத்திரம் வெளியிடுவதை அரசாங்கம் பிரதான செயற்பாடாக கொண்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து பி.எஸ்.எம்.சார்ல்ஸ் பதவி விலகியமை தேர்தலை நடத்த ஒரு தடையாக அமையாது.

மேலும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் அனைத்து தன்னிச்சையான செயற்பாடுகளுக்கும் மக்கள் ஜனநாயக ரீதியில் பதிலடி கொடுப்பார்கள் என ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார். (நி)

## இலங்கை வருகிறார் பான் கீ மூன்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு அமைய இலங்கையில் நிரந்தர அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றங்கள் சம்பந்தமாக சில ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அவர் எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். தென்கொரியாவின் அரச நிறுவனமான உலக பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் பான் கீ மூன் இலங்கையுடன் இந்த ஒப்பந்தங்களை கைச்சாத்திட உள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துக்கு எதிரான தொடர் தென்னாபிரிக்கா சிறப்பான வெற்றி




இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ப்ளூம் ஃபோன்டைன் மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 298 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, வெண்டர் டுஸன் 111 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சேம் கர்ரன் 3 விக்கெட்டுகளையும் ஜெப்ரா ஆர்செர், மொயின் அலி, அடில் ராஷித் மற்றும் ஹொலி ஸ்டோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 299 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 44.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால், தென்னாபிரிக்கா அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ரோய் 113 ஓட்டங்களையும் டாவிட் மாலன் 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், ஹென்ரிச் நோட்ஜே 4 விக்கெட்டுகளையும் மகாலா 3 விக்கெட்டுகளையும் கார் கிஸோ ரபாடா 2 விக்கெட்டுகளையும் சம்ஸி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சாளர் சிசன்டா மகாலா தெரிவு செய்யப்பட்டார். (4)

## அவுஸ்திரேலிய ஓபன்

# சிட்னிபாஸ்-ஜோகோவிச் இறுதிப் போட்டிக்கு தகுதி



ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் மற்றும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஆகியோர் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் அரையிறுதிப் போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ்வை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், 7-6, 6-4, 6-7, 6-3 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அமெரிக்காவின் டொமி போலை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், நோவக் ஜோகோவிச், 7-5, 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றார். (4)

# சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதை வென்றார் ஸ்டோக்ஸ்



2022 ஆம் வருடத்தின் அதிசிறந்த ஐ.சி.சி டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதை இங்கிலாந்து அணித் தலைவரும் சகலதுறை வீரருமான பென் ஸ்டோக்ஸ் வென்றெடுத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் கடந்த வருடம் வேறு யாரையும் விட சகல துறைகளிலும் பிரகாசித்ததற்காகவே பென் ஸ்டோக்ஸுக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

கடந்த வருடம் 15 டெஸ்ட் போட்டிகளில் 26 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய பென் ஸ்டோக்ஸ் 2 சதங்கள், 4 அரைச் சதங்கள் உட்பட 870 ஓட்டங்களை குவித்தார்.

அதேபோன்று 20 இன்னிங்ஸ்களில் பந்து வீசிய பென் ஸ்டோக்ஸ் 26 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன் 10 பிடிகளையும் எடுத்துள்ளார். இதன் மூலம் அவரது சகல துறை ஆற்றல் வெளிப்பட்டது.

இங்கிலாந்தின் டெஸ்ட் அணித் தலைமைப் பதவியை பென் ஸ்டோக்ஸ் ஏற்ற பின்னர் 10 போட்டிகளில் 9 இல் இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது.

நியூஸிலாந்தையும் தென் ஆபிரிக்காவையும் டெஸ்ட் தொடர்களில் தனது சொந்த மண்ணில் வெற்றிகொண்ட இங்கிலாந்து, பிற்போடப்பட்ட இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று, அத்தொடரை 2-2 என சமப்படுத்தியது.

அதனை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த இங்கிலாந்து, அங்கு 3-0 என முழுமையான வெற்றியை ஈட்டி தொடரை கைப்பற்றியது.

பென் ஸ்டோக்ஸ் அணித் தலைவராவதற்கு முன்னர் விளையாடப்பட்ட 4 டெஸ்ட் தொடர்களில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததுடன், 17 டெஸ்ட் போட்டிகளில் ஒரு வெற்றியையே ஈட்டியிருந்தது. (4)

# பலம் பொருந்திய இந்தியாவை வீழ்த்தியது நியூஸிலாந்து




இந்திய கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில், நியூஸிலாந்து. அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரஞ்சி மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.




இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டேரில் மிட்செல் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் கோன்வே 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வொஷிங்டன் சுந்தர் 2 விக்கெட்டுகளையும் ஹர்ஸ்தீப் சிங், குல்தீப் யாதவ், சிவம் மாவி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 177 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய கிரிக்கெட் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், நியூஸிலாந்து அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, வொஷிங்டன் சுந்தர் 50 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மைக்கேல் பிரேஸ்வெல், மிட்செல் சான்ட்னர் மற்றும் லொக்கி பெர்குசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டப்ஃபி மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 30 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்கலாக, ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டேரில் மிட் செல் தெரிவுசெய்யப்பட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீற்றர் வட்டி விவகாரம் இதுவரை ஐவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்து துன்புறுத்தும் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் முதன்மை சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வரும் பெப்ரவரி 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடைய முச்சக்கர வண்டி சாரதி உள்ளிட்ட ஐவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட முதன்மை சந்தேகநபர் உள்ளிட்ட நால்வர் நாளாந்த மீற்றர் வட்டிக்கு பணம் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களுக்கு முச்சக்கர வண்டி சாரதி கூலிக்கு உதவியுள்ளார்.

நாளாந்த வட்டிக்கு பணம் வாங்கியவர்கள் ஒரு வாரத்துக்கு பணத்தையோ வட்டியையோ வழங்காவிடின் அவர்களை முச்சக்கர வண்டியில் அழைத்து வந்து அடித்து துன்புறுத்துவதை இந்தக் கும்பல் முன்னெடுத்துள்ளது.

சிறு முயற்சிகளில் ஈடுபடுவோர் 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை நாளாந்த வட்டிக்கு இந்தக் கும்பலிடம் பணத்தை வாங்கி பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் துன்புறுத்தப்பட்ட எவரும் முறைப்பாடு வழங்கவில்லை.

கைது செய்யப்பட்ட அனைவரும் காணொளி ஆதாரத்துடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-33)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து யாழ். மாவட்ட அலுவலகத்திற்குக் கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத் தளத்திலும் பார்வையிடலாம்

https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடு மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் அறிவித்துள்ளார். (4)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் குறுகியகாலக் கற்கை நெறிகளான தொடர்பாடலுக்கான ஆங்கிலம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 05.02.2023 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணிதம், மற்றும் உயிரியலில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 08.03.2023 ஆம் திகதி விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

## வலி.வடக்கு காணி விடுவிப்பு

# இராணுவத்தின் வேலி, தளபாடங்களை அகற்றும் பணி முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலிகாமம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளின் ஒரு தொகுதி விடுவிக்கப்படவுள்ளது. இந்நிலையில் இராணுவத்தினர் அங்கு முன்னர் அமைத்திருந்த முட்கம்பி வேலிகள், இராணுவத் தபாடங்களை அகற்றி வருகின்றனர்.

ஜனாதிபதி பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற காணிகள் விடுவிப்பு கூட்டத்தில் இராணுவத்தினர், ஜனாதிபதிக்கு சில வாரங்களில் சுமார் 110 ஏக்கர் காணியை விடுப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

இந்நிலையில் அதற்கான வேலைகள் இடம்பெறுகிறது. பலாலி வடக்கில் 13 ஏக்கர், மயிலிட்டி வடக்கு 18 ஏக்கர், மயிலிட்டி வீசி ரோட் கிராமக் கோட்டு இராணுவ முகாம் காணி, கே.கே.எஸ். பிரிவில் 28 ஏக்கரும் கீரிமலையில் 30 ஏக்கரும் காங்கேசன்துறையில் 21 ஏக்கர் என 5 இடத்திலுமாக 110 ஏக்கரும் விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இவை சுதந்திர தினத்துக்கு முன்பாக விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தையடுத்து ஜனாதிபதியின் உத்தரவின்படி வலி.வடக்கில் மேலும் காணிகள் இனங்காணப்பட்டு அதனையும் இராணுவத்தினர் விடுவிக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவை அடுத்த கட்டமாக மார்ச் அல்லது ஏப்ரல் மாதமளவில் விடுவிக்கப்படவுள்ளன. (4-33)

# இராசிபலன்

29.01.2023
தை 15, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பிற்பகல் 2.56 மணிவரை

பரணி பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

அட்டமி-நவமி
சந்திராஷ்டமம்-
அத்தம், சித்திரை

**வளவன்**

**மேஷம்** — நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வேலைச்சுமை கூடும், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** — மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், எதிர்பார்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கன்னி** — ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பிரயாண பயமுண்டு, மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**துலாம்** — நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வழியில் கௌரவமான சம்பவங்கள் நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**தனுசு** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்** — உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** — எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், பொன்னான நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்** — வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

தாங்கிக் கொள்வதும் நம் விதியை வெல்ல சிறந்த வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 381
Viber 076 636 3378



# ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காத 13 நிறைவேற்றப்படுமா?

**13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தி 36 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் இன்னும் கால அவகாசம் கேட்கும் ஆட்சியாளர்கள் தமிழினத்துக்கு அதிகாரங்களுடன் கூடிய உரிமையை வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே?**

• அபிமன்யு

இலங்கையில் புரையோடிக்கிடக்கும் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதில் உலக நாடுகள் கருணை கொண்டிருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் யாரும் முனைப்புக் காட்டுவதாய்த் தெரியவில்லை.

மாறாக இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட வன்கொடுமைகளுக்கான பொறுப்புக் கூறலுக்கு தொடர்ந்து அவகாசம் வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கருத்தில் எடுக்க வேண்டும்.பயங்கரவாதத்திற்கு எதிராக அரசு போரிட்டது எனின் அதில் அப்பாவி மக்கள் ஏன் கொல்லப்பட வேண்டும்?

போர் எனின் இழப்புகள் நடக்கவே செய்யும் ஆயினும் அளவுக்கு மீறிய அநியாய இழப்புக்களை எவராலும் ஏற்றுவிட முடியாது.

போரில் அப்பாவி பொதுமக்கள் கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் வெளிவந்த போதிலும் அதை மறுத்து பாதுகாப்புத் தரப்பை பாதுகாப்பதில் பேரினவாத அரசுகள் முனைப்புக்காட்டிக் கொண்டேயிருக்கின்றன.

இது இந்த நாட்டில் ஒரு இனத்தை வஞ்சிக்கும் செயல் என்பதை ஆட்சியாளர்கள் அறியாமல் இல்லை.

ஆயினும் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுடன் விளையாடுவதை இன்றுவரை நிறுத்துவதாய் தெரியவில்லை. இலங்கையில் நிரந்தர சமாதானம் மலரவும் தமிழர் தனது உரிமைகளைப் பெற்று வாழவும் இந்தியாவின் துணை மிக முக்கியமானதாக அமையும் என்பதில் மறுகருத்துக்கு இடமில்லை.

1987 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆகியோருக்கிடையில் நடந்த இலங்கை-இந்திய ஒப்பந்தம் இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அமைந்திருந்திருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படாதது தமிழனத்தின் துரதிஸ்டமே.

இந்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை இற்றைக்கு 36 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் நடைமுறைப்படுத்த பேரினவாத அரசுகள் பின்னடிப்பு செய்யும் உண்மையினை இந்தியாவும் புரிந்து கொள்ள வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் அடக்கப்படும் மாகாண முறையே பெரும்பான்மை அரசுகளுக்கு கெலியூட்டுவதாக அமைந்திருந்தது.

அதாவது மாகாண முறைமையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.காணி,பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு-கிழக்கிற்கு வழங்குவதில் ஆட்சியாளர்களுக்கு இம்மியும் மனம் இருந்திருக்கவில்லை.



காரணம் அது தமிழ் இனத்தின் எழுச்சியாக அமைந்து விடும் அதனூடே தனிநாடு அடையப்பட்டு விடும் என்ற விசமப் பிரச்சாரங்களும் அடங்கியுள்ளன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கும் அது அமுல்படுத்தப்படாததற்கும் சிறுபான்மைத் தமிழினமே காரணமாகிறது.

ஆம், இந்தியாவினால் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் சிறுபான்மைத் தமிழினம் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டதே.

13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தினால் அது வட-கிழக்கு தனிநாடாக உருமாற வழிவகுக்கும் என்ற ஆட்சியாளர்களின் அச்சமே அதை நடைமுறைப்படுத்தாததற்கான காரணமும் ஆகின்றது.

சிறுபான்மை இனத்தவரின் உரிமை களை வென்றெடுக்க,தெற்காசியாவின் வல்ல ரசாகத் திகழும் இந்தியாவினால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு சட்டமூலத்தை அமுல்படுத்தாமல் காலம் கடத்திய ஆட்சியாளர்களுக்கு கிடைத்த பலம் சீனா என்ற உண்மையையும் நாம் இங்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு நாடாக சீனா திகழ்வதை சாதகமாகப் பயன்படுத்திய இலங்கை ஆட்சியாளர்கள் சீனாவுடன் ஒத்துப் போகத் தலைப்பட்டனர்.

அது இந்தியாவுக்கு பாரிய தலையிடியை ஏற்படுத்தியிருந்தது. இதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா இலங்கை அரசை அழுத்தத் தவறியதான வரலாறு, வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாயிரம் அப்பாவி உயிர்கள் பறிபோக காரணமாக அமைந்தது.

தமிழினத்தின் ஆயுத பலம் அழித்தொழிக்கப் பட்டதன் பின்னரும் கூட இலங்கையில் தமிழினத்திற்கான உரிமைகளை பெற்றுத் தரவேண்டும் என்பதில் இந்தியாவோ உலக நாடுகளோ அதிகம் அக்கறை செலுத்தவில்லை.

இது சீனாவை இலங்கையில் காலூன்ட விடாமல் தடுப்பதற்கான தற்காலிக காய் நகர்த்தலாக இந்திய எடுத்துக் கொண்டது என்பதே யதார்த்தம்.

கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் தேசிய பொங்கல் விழா நடைபெற்றிருந்தது.ரணில் விக்கிரமசிங்கவிற்கு யாழில் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது நாம் அறிந்ததே.

பொங்கல் விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த நீண்ட காலம் தேவை எனக் கூறியிருந்தார்.

அதாவது 13 ஆவது சட்ட மூலத்தை சடுதியாக அமுல்படுத்த முடியாது எனவும் அதற்கு கால அவகாசம் தேவை எனவும் தெரிவித்திருந்தார்.

நிலை இவ்வாறாக இருக்கையில் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உரையாற்றிய அவர் ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தச் சட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்துவேன் எனக் கூறியிருக்கின்றார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இன்றும் அவகாசம் தேவை எனக் கூறிய ஜனாதிபதி எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஐ நிறைவேற்றுவேன் எனத் தெரிவித்திருப்பதற்குள் இருக்கும் முரனை தமிழ் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியின் குறித்த கருத்திற்கு தென் இலங்கையில் எதிர்ப்புக்கள் எழும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. அதற்கு சான்று பகர்க்கும் விதமாக 13 ஐ நிறைவேற்றினால் தமிழீழம் மலரும் என இனவாதக் கருத்தைக் கக்கி இருக்கிறார் விமல் வீரவன்ச.

சிறுபான்மைத் தமிழினத்துக்கான அதிகாரங்கள் அனைத்தையும் வழங்கும் ஒரு தீர்வுப் பொதியாக கருதப்படும் 13 ஆவது சட்ட மூலத்தை இலங்கை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தினால் மகிழ்ச்சி.நடைமுறைப்படுத்துவ்ார்களா என்பது சந்தேகமே. பொறுத்திருந்து பார்ப்போம். எது எவ்வாறு நடக்கப் போகிறது என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதன்போது விதானையார் விசுவலிங்கம் கோபாவேசத்துடன் இருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன விதானையார் ஒருமாதிரியாக இருக்கிறியள். ஏதேனும் பிரச்சினையோ.

**விதானையார்:** இந்த நாட்டில எல்லாம் பிரச்சினைதானே! மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகிற இந்த நேரத்திலும் மின்சாரத்தை துண்டிக்கிற அளவிலதானே எங்கட நாடு இருக்குது.

இந்தத் திறத்தில 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை அமுல்படுத்தினால், நாடு பிரியும் எண்டு விமல் வீரவன்ச சொல்லுறார்.

**மூப்பர்:** இப்ப இருக்கிற சூழ்நிலையில நாட்டைப் பிரித்து தமிழர் தாயகத்தை தமிழ் மக்களிட்டக் கொடுத்தால், ஓரளவுக்கேனும் பொருளாதார நெருக்கடி குறையும் எண்டு தான் நான் நினைக்கிறன்.

**சிறாப்பர்:** மூப்பர் சொல்லுறதும் சரிதான். இப்ப நாட்டைப் பிரிக்காவிட்டால், சிலவேளை முழு நாட்டையும் பொறுப்பெடுங்கள் எண்டு தமிழ் மக்களிட்டக் கேட்கிற சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு சிறாப்பர் கூற, சாத்திரியார் சதாசிவம் கையடக்கத் தொலைபேசியில் கடுந்தொனியில் கதைத்துக் கொண்டிருந்தார்.

அதனை ஆலடியில இருந்தவர்கள் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

**சாத்திரியார்:** தீவகத்தில நெல்லு வெட்டும் இயந்திரங்களுக்கு ஒரு பரப்புக்கு 800 ரூபாய் வாங்குகினம். இதேபோல பளையில ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் அறவிடப்படுகிறது.

ஆனால் நீங்கள் மட்டும் ஒரு பரப்புக்கு 1200 ரூபாய் வாங்கிறியள் எண்டால், அது எந்த வகையில நியாயம்.

இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள் இப்படிக் கட்டணம் வேறுபட்டால், இனிமேல் விதைப்பில ஆரும் ஈடுபடுவினமோ அல்லது விவசாயம் தான் செய்வினமோ...

சாத்திரியாரின் தொலைபேசி உரையாடல், நெல் வெட்டும் இயந்திரத்திற்குக் கண்டபாட்டில கட்டணம் அறவிடப்படுகின்ற விவகாரம் என்பதை வெளிப்படுத்தியது.

சாத்திரியார் தொலைபேசியில உரையாடிக் கொண்டிருக்கையில் பண்டிதர் பரமலிங்கம் சாத்திரியாரின் வாதத்திற்கு ஆதரவாகக் கருத்துரைத்தார்.

**பண்டிதர்:** சாத்திரியார் சொல்லுறது நூறு வீதம் சரி; நெல் வெட்டுறதுக்கு ஒரு பரப்புக்கு 1200 ரூபாவை அறவிடுகிறதென்பது அநீதியானது. இது விவசாயிகளை உறிஞ்சுகிற நடவடிக்கைதான்.


**விதானையார்:** பண்டிதர் ஐயா! நீங்கள் இதைச் சொல்லுறியள், அறுவடை காலங்களில நெல் வியாபாரிகள் எவ்வளவு அமர்த்தி நெல்லை வாங்குகினம்.

அரிசியின்ர விலையைக் குறைப்பதற்கு மில் முதலாளிமார் தயாரில்லை. ஆனால் ஒரு மூடை நெல்லை 5000 ரூபாவுக்கு வாங்குவதற்குக்கூட, நெல் வியாபாரிகள் மறுக்கினம் எண்டால் அதின்ர பொருள் என்ன?

**மூப்பர்:** கடன்பட்டு வேளாண்மை செய்த விவசாயிகள் எப்படியும் நெல்லை விற்றால் தான் அவையின்ர சீவியம் நடக்கும்.

ஆகையால அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விலையை அமர்த்தி நெல்லை வாங்குகிற முயற்சிதான் இது.

(இவ்வாறு மூப்பர் சொல்லி முடிக்க, சாத்திரியார் சதாசிவத்தின்ர தொலைபேசி உரையாடலும் முடிவுக்கு வந்தது. என்ன சாத்திரியார் நெல் வெட்டுறது சரி வந்திட்டுதோ. சிறாப்பர் கனகசபை விசாரித்தார்.)



## நெல் வெட்டும் இயந்திரம் விவசாயிகளை உறிஞ்சுது

**சாத்திரியார்:** ஒரு பரப்பில் நெல் வெட்டுறதுக்கு 1200 ரூபாய் அறவிட்டால், நெல்லை வெட்டுறதைவிடப் பேசாமல் இருப்பது உத்தமம் எண்டு தான் நான் நினைக்கிறன். நெல்லும் சீராக விளையல்ல, மடிச்சுக்கட்டி நோய் வந்து எல்லாத்தையும் நாசமாக்கிப் போட்டுது.

இந்த நேரத்தில நெல்லையும் குறைந்த விலையில கொள்வனவு செய்தால், விவசாயிகள் என்ன செய்யிறது.

**வாத்தியார்:** மானிய உரத்திற்குப் பதிவு- இயற்கை மருந்துக்குப் பதிவு எண்டு எல்லாத்தையும் பதிவு செய்யிற கமத்தொழில் சேவை நிலையங்கள் உழவுக்கான உழவு இயந்திரக் கட்டணம், நெல்லு வெட்டுக்கான கட்டணம் என்பவற்றையும் நிர்ணயம் செய்து, அந்தந்தப் பிரதேசங்களில இருக்கிற நெல் வெட்டும் இயந்திர உரிமையாளர்களை அழைத்து, இந்தக் கட்டணத்தில தான் நெல் வெட்ட வேணும் எண்டு அறிவுறுத்தினால் நல்லது தானே!

(வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.)

**கங்காணி:** அதுசரி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்கக்கூடிய சாத்தியம் இருக்குதோ.

**விதானையார்:** தேர்தலை நடத்தாமலும் ஒண்டும் செய்ய ஏலாது என்பது ஒருபுறம், ஆனால் எங்கட அரசியல்வாதிகள் கன்னை பிரிந்து நிற்கிறதைப் பார்க்கத்தான் பயமாக இருக்குது.

**சிறாப்பர்:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:** இப்ப பார்க்கல்லயோ எங்கட மண்ணில நடக்கிற திருக்கூத்துகளை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கொலை நடந்தே ஆகுது.

இதைவிட, கோஷ்டி மோதல்கள், அடிதடிகள் என்பவற்றுக்கு எங்களிட்டக் குறைவே இல்லை.

இதுக்கு மேலாக, வெளிநாடுகளில இருந்து கொண்டு, இங்க கூலிக்குக் கொலை செய்யிற அளவில நிலைமை வந்திட்டுது. இந்த நிலையில எங்கட தமிழ் அரசியல் கட்சிகள் கன்னை பிரிந்து நிண்டால், அவையள் தேர்தலை மையப்படுத்தி நிற்பினமே தவிர, எங்கட மண்ணில நடக்கிற வன்முறைகள் பற்றி அவர்கள் இம்மியும் கரிசனை காட்டமாட்டினம்.

சிலவேளை இந்த வன்முறைகள் தேர்தலிலும் தாண்டவமாடலாம்.

(இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில மீண்டும் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.)

**வாத்தியார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டிருக்கினம்.

இதில வேடிக்கை என்னவென்றால், ஒரு பேரவையின் உறுப்பினர்களைப் பகுதி பகுதியாக அறிவித்ததுதான்.

**பண்டிதர்:** வாத்தியார் இதுபற்றி நீங்கள் கவலைப்படாதீங்க. இன்னும் சில வருடங்களில பேரவை உறுப்பினர் தெரிவில இந்து சமயம் ஓரங்கட்டப்படும். இப்பவே அதின்ர அறிகுறி தெரியத் தொடங்கிற்று.

அதைவிட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில சிங்கள மாணவர்களின்ர எண்ணிக்கை அதிகரித்து வருவதால பேரவையில சிங்களப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்.

அதன் பிறகு நீங்கள் எதுவும் கதைக்க முடியாத சூழ்நிலை உருவாகும்.

அந்நேரம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில சேர்.பொன் இராமநாதனின் சிலை எதற்கு எண்டு கேட்கப்படும். இதுதான் நடக்கும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமா நடிகைகள் என் கனவில் அடிக்கடி வருகிறார்களே காரணம் என்னவாக இருக்கும் வியாசரே?

மதுவன் மீசாலை

**உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதன் நோக்கம் என்ன வியாசரே?**

அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாய் செயற்பட வேண்டும் என்பது தான் தமிழ் மக்களின் விருப்பம்.
இல்லை நாம் பிரிந்து நின்றே போட்டியிடுவோம் என யார் முனைந்தாலும் அதற்கு தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்பதில் ஐயம் இல்லை.
தமிழரசுக் கட்சியின் தனி வழி எதுவரை செல்கிறது என்பதை நடக்கப் போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தெளிவாக எடுத்தியம்பும். பொறுத்திருந்து பார்ப்போமே.

ஜெகமோகன் கொக்குவில்

**கற்றது கைமண் அளவு கல்லாதது உலக அளவு என்பதன் அர்த்தம் என்ன வியாசரே?**

மனிதர்கள் பலரில் உள்ள பிரச்சினையே அது தான். தமக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற நினைப்பில் அடுத்தவரை மட்டம் தட்டி விடுவது.
ஒருவரை நாம் மட்டம் தட்டி பேசுகிறோம், எண்ணுகிறோம் எனின் இதில் மட்டம் தட்டப்படுவது நாம் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.
இதை உணராதவரை எம்மைப் போல மேதாவிகள் இந்த உலகில் இல்லை என்ற மனநிலையே உயர்ந்து நிற்கும்.

தமிழ் யாழ்ப்பாணம்

**13 ஆவது திருத்தச் சட்ட மூலம் எப்பாடு பட்டும் நிறைவேற்றப்படுமாமே? உண்மையா?**

13 ஆவது திருத்தச் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டு இற்றைக்கு 36 ஆண்டுகள் கடந்து விட்டன. யாரும் அது தொடர்பில் பேசுவாரில்லை.
சீனப் பூச்சாண்டி காட்டி இந்தியாவின் வாயை அடைத்த இலங்கை ஆட்சியாளர்களுக்கு இப்போது என்ன ஞானம் வந்ததோ தெரியவில்லை 13 பற்றிப் பேசுகிறார்கள்.
ஒரு இனத்தை வஞ்சித்த அரசினை தனது நாட்டின் பாதுகாப்பிற்காக காப்பாற்ற நினைப்பது எந்த வகையிலும் அறம் அல்ல.
ஏழரைச் சனியன் தமிழினத்தைப் பற்றி நிற்கும் நேரத்தில் 13 வந்தென்ன 23 வந்தென்ன.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

சுதன் குப்பிளான்


**சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை பறித்து வைத்துக் கொண்டு சட்டம் பேசுகிறார்களே?**

என்ன செய்வது தமிழினத்தின் பெயரைக் கேட்டாலே பீதியில் நடுங்கிய பலர் இப்போது எகத் தாளம் பேசுகிறார்கள்.
தமிழினத்துக்கு அதிகாரப் பகிர்வு வழங்கினால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்கிறார்கள்.
இது தான் இவர்களின் சுயரூபம். எது நடந்தாலும் அமைதியாய் இருக்கும் இவர்கள் தமிழினத்தின் தீர்வு விடயம் எடுபட்டவுடன் தொடங்கி விடுவார்கள் இனவாதத்தைக் கக்க.

சு.ஜெயரூபன் பருத்தித்துறை

**சினிமா நடிகைகள் என் கனவில் அடிக்கடி வருகிறார்களே காரணம் என்னவாக இருக்கும் வியாசரே?**

இதற்குப் பெயர் சினிமா மேனியா என்பதாகும்.
இந்த மேனியாவுக்கு உலகில் இன்னமும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை.
ஆனால் இந்த மேனியாவுக்கு நல்ல நாட்டு மருந்து ஒன்று உண்டு.
அதாவது செவிடைப் பொத்தி இரண்டு போட்டால் எல்லாம் சரி வந்துவிடும். என்ன தம்பி நாட்டு மருந்தை ரெடி பண்ணுவமா?



13 ஆவது திருத்தச் சட்ட மூலம் எப்பாடு பட்டும் நிறைவேற்றப்படுமாமே? உண்மையா?

தருஷ் வதிரி

**நாடு போற போக்கைப் பார்த்தால் எப்படி இருக்கும் என்ற பயம் உருவாகிறதே வியாசரே?**

ஒரு இறாத்தல் பாண் 200 ரூபா என்பதை கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டோம்.
ஆனால் இன்று 200 ரூபாய் கொடுத்து வாங்கி உண்கின்றோம்.
இந்த நிலை இனி முடியும் என்று கற்பனை செய்ய வேண்டாம்.
நாடு எக்கேடு கெட்டுப் போனால் அவர்களுக்கு என்ன .
எரிகிற வீட்டில் பிடிங்கியது மிச்சம் என இருந்துவிடுவார்கள் அந்த விசுவாசிகள்.

வசந்தரூபன் யாழ்ப்பாணம்

**அன்பின் வியாசரே நீங்கள் தேர்தலில் குதிக்கவில்லையா?**

இந்தத் தேர்தல் தமிழினத்தின் ஒற்றுமை உடைக்கப்பட்ட தேர்தல் என்றே கூற வேண்டும்.
அரச தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தமக்கான வாக்குகளைப் பிரிக்காமல் பெற்றுக்கொள்வார்கள்.
ஆனால் பிரிவது என்னவோ தமிழ்த் தேசிய வாக்குகளே.
நாம்தான் கொள்கையின்றி, மக்கள் அபிலாசைகளை மறந்து சுயநல அரசியல் செய்யும் நோக்கம் கொண்டு விட்டோமே.
இனி எதைச் செய்து விட முடியும். வாக்குகள் பிரிந்து செல்வதையும் வெற்றிகளை மாற்றுக் கட்சிகளுக்குத் தாரை வார்ப்பதையும் எவராலும் தடுக்க முடியாது.

தீபராஜ் மாதகல்

**பழைய பாடல்களுக்கும் புதிய பாடல்களுக்கும் இடையில் இருக்கும் வேறுமை என்ன வியாசரே?**

பழைய பாடல்களில் பொருள் இருக்கும். இரசிக்கும் படி மென்மையான இசையிருக்கும்.
புதிய பாடல்களில் பொருளும் இல்லை நல்ல வரியும் இல்லை. இசையென்ற பெயரில் ரம்மில் தட்டியது போல கும்மு கும்மு என்ற சத்தம் மட்டும் தாராளமாய் வரும்.
இந்தக் கண்றாவி இசைக்கு இளசுகள் ஆட்டம் வேற.
சகிக்க முடியவில்லை சாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பணம் படைத்தவன்
பாடியவர்: சௌந்தரராஜன், சுசீலா
இயற்றியவர்: கவிஞர் வாலி
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி



ஆஹா.. ஓஹோ.. ஆஹா..

பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்
கன்னி ஓவியம் உயிர்கொண்டு வந்தால்
பெண்மயில் என்றே பேராகும்
பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்
கன்னி ஓவியம் உயிர்கொண்டு வந்தால்
பெண்மயில் என்றே பேராகும்
ஆ..ஆ..ஆஆஅ..

பூமகள் மெல்ல வாய்மொழி சொல்ல
சொல்லிய வார்த்தை பண்ணாகும்
பூமகள் மெல்ல வாய்மொழி சொல்ல
சொல்லிய வார்த்தை பண்ணாகும்
காலடித் தாமரை நாலடி நடந்தால்
காதலன் உள்ளம் புண்ணாகும் – இந்தக்
காதலன் உள்ளம் புண்ணாகும்

பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்
கன்னி ஓவியம் உயிர்கொண்டு வந்தால்
பெண்மயில் என்றே பேராகும்
ஆ..ஆ..ஆஆஅ..

ஆடைகள் அழகை மூடிய போதும்
ஆசைகள் நெஞ்சில் ஆறாகும்
ஆடைகள் அழகை மூடிய போதும்
ஆசைகள் நெஞ்சில் ஆறாகும்
மாந்தளிர் மேனி மார்பினில் சாய்ந்தால்
வாழ்ந்திடும் காலம் நூறாகும் – இங்கு
வாழ்ந்திடும் காலம் நூறாகும்

பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால்
புன்னகை என்றே பேராகும்
கன்னி ஓவியம் உயிர்கொண்டு வந்தால்
பெண்மயில் என்றே பேராகும்

ஆ..ஆ..ஆஆஅ..

# மனதுக்கு மூன்று மருந்து!

அடர்ந்த காடு அது. பகைவர்களால் துரத்தப்பட்டுக் கொண்டிருந்தான் ஒருவன். அவர்களிடம் சிக்கிக்கொண்டால், அவன் உயிர்தப்பிப்பது கடினம். காலனின் தூதர்களைப் போன்று அவர்கள் தங்களின் குதிரைகளில் துரத்திவர, மூச்சிரைக்க ஓடிக்கொண்டிருந்தான் அந்த மனிதன்.

குதிரைகளின் குளம்படி ஓசை, அவனுக்கு இடியோசை போன்று இருந்தது. வனப்புறத்தில் ஓடிக்கொண்டிருந்தவன் அவனையும் அறியாமல், அருகிலிருந்த மலைப் பாதையில் ஓடத் தொடங்கினான். அவர்களும் விடாமல் துரத்தினார்கள்.

இதோ மலை விளிம்புக்கே வந்துவிட்டான். இனி ஓடுவதற்குப் பாதை இல்லை. அதலபாதாளமே தெரிந்தது. அதேநேரம் குதிரைகளின் கனைப்பொலியும் மிக அருகில் கேட்டது. 'வேறு வழியில்லை குதித்துவிட வேண்டியதுதான்' என்று கருதியவன் குதித்துவிட்டான். நல்லவேளையாக மரக்கிளை ஒன்று கைகளில் அகப்பட பிடித்துக்கொண்டான். ஆனாலும் ஆபத்து முற்றிலும் நீங்கிவிடவில்லை. இவன் தரையில் குதித்தால் கடித்துக்குதறி விட, அங்கே இரண்டு சிங்கங்கள் காத்திருந்தன.

மேலே நோக்கினான்... அங்கே வில்லில் நாணேற்றி, இவனை நோக்கி அம்பு தொடுக்கக் குறிபார்த்துக் கொண்டிருந்தார்கள் பகைவர்கள். அதேநேரம் மரக்கிளையில் ஏதோ நெளிவது போன்று தெரிந்தது. சந்தேகமே இல்லை... அதுவொரு விஷப் பாம்புதான்.

இப்படியான ஆபத்துகளால் அவன் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த தருணத்தில் மரத்தில் கூடு கட்டியிருந்த தேன்கூட்டிலிருந்து வழிந்த ஒரு சொட்டுத் தேன் அவன் வாயில் விழ, அதன் தித்திப்பை சுவைத்தவன் 'ஆஹா...' என்றானாம்!

இப்படித்தான் நம்மில் பலரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தற்காலிக சந்தோஷத்தில் திளைத்துப் போகிறோம். கேளிக்கைகளில் மனம் லயித்துவிடுகிறோம். தவறான பழக்க வழக்கங்களுக்கும் சிலர் ஆளாகி விடுகிறார்கள்.

செய்யும் தொழிலோ, பணியோ... நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அதில் சிரத்தையுடன் மனதைச் செலுத்தி, முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்ய வேண்டும். கேளிக்கைகள் சிரத்தையை நீர்த்துப் போகச் செய்துவிடும். நம் சிந்தனையைச் சிதறடித்து விடும்.

துல்லியத் தன்மையுடன் இலக்கை வென்றடைய நம் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒரே கோட்டில் பயணிப்பது மிக மிக அவசியம். எண்ணத்தில் ஒன்றிருக்க சொல்லும் செயலும் வேறொன்றை வெளிப்படுத்தினால், தோல்விகளே பரிசாகக் கிடைக்கும். வீண் கேளிக்கைகளும் வேண்டாத பழக்கவழக்கங்களும் மேற்காணும் மூன்றையும் வெவ்வேறு பாதைகளிலேயே பயணிக்க வைத்துவிடும்.

எனில், பிரச்சினைகளாலும் வேலைப்பளுவாலும் சஞ்சலம் கொள்ளும் – சோர்வடையும் மனதுக்கு மருந்து தான் என்ன?

'எப்போதெல்லாம் மனம் நிலையற்று அலைகிறதோ, அப்போது மனதை ஆத்மாவின் வசத்தில் நிலைநிறுத்த வேண்டும்' என்று கீதையில் வழிகாட்டுகிறார் கிருஷ்ண பரமாத்மா. இதற்கு தியானம், யோகா போன்ற சாதனங்கள் உதவும் ஆனால், இவற்றைக் கடைப்பிடிப்பது எல்லோருக்கும் சாத்தியமா?



வைராக்கியத்துடன் கடைப்பிடிக்கத் தொடங்கினால், எதுவும் சாத்தியமே! ஒருவேளை 'இந்தப் பயிற்சிகள் எல்லாம் நமக்குச் சாத்தியம் இல்லை... கடினம்' என்று தோன்றுகிறதா? எனில், உங்களுக்காகவே மூன்று எளிய வழிகளைச் சொல்லித் தந்துள்ளனர் பெரியோர்கள்.

முதலாவது, தினமும் இரவில் படுக்கச் செல்லும் முன் உங்கள் மனதோடு பத்து நிமிடங்களேனும் அளவளாவுங்கள். அந்தத் தினத்தில் நீங்கள் செய்த காரியங்கள், மேற்கொண்ட முயற்சிகள், நடவடிக்கைகள் யாவும் சரியானவைதானா? அலுவலரிடம் கோபித்துக் கொண்டேனே... அதிகாரியிடம் முரண்பட்டேனே... என் வாடிக்கையாளரைக் கடிந்து கொண்டேனே... இவை சரிதானா என்று மனதிடம் கேளுங்கள்.

மெல்ல மெல்ல மனதின் குரல் உள்ளுக்குள் ஒலிக்கும். உங்கள் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் பல பிரச்சினைகளுக்கான தீர்வும் புலப்படும். ஒரு வகையில் தியானத்தின் ஆரம்ப நிலையும் இது தான்!

இரண்டாவது வழி... நீங்கள் கைக்கொண்டிருக்கும் முயற்சி அல்லது வேலையில் சோர்வோ மனத்தளர்ச்சியோ ஏற்படும் நேரங்களில், வேறொரு சிறு வேலையைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் கவனம் செலுத்துங்கள். அந்தச் சிறிய வேலையை முடிக்கும்போது உங்களுக்கு ஏற்பட்டிருந்த மனத்தளர்ச்சியும் சோர்வும் விடைபெற்றிருப்பதை உணர்வீர்கள். பிறகு உற்சாகத்தோடு பழைய வேலையில் கவனம் செலுத்தலாம்.

மூன்றாவது வழி எல்லோருக்கும் தெரிந்ததுதான்... புத்தகங்கள் வாசித்தல் பிரச்சினைகளால் அழுத்தப்படும் தருணங்களில் சிந்தனைப் புலன்கள் ஒரு தடுமாற்றத்தைச் சந்திக்கும். அப்படியான தருணங்களில் அவற்றுக்குப் புதுவித மலர்ச்சியைத் தரும் சூட்சுமம், உங்களுக்குப் பிடித்த புத்தகங்களுக்கு நிச்சயம் உண்டு.

இப்படியாக நம் மனதை மலர்ச்சியாக வைத்துக் கொள்ளும்போது, நம் சிந்தனை சிறக்கும் செயல்கள் வெற்றியைச் சந்திக்கும், எவ்விதப் பிரச்சினைகளையும்எளிதில்கையாளும் வல்லமை பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எதிரிக்கும் உதவிடுவதே அறம்!"

"சென்னை நெகிழ வைத்திருக்கிறது. விமான நிலையத்திற்கு என்னை வரவேற்க நூற்றுக் கணக்கான தோழர்கள் வந்தனர். இங்கே நடந்த கலந்துரையாடல்கள் மூலமாக சேகுவேரா மீது தமிழக மக்கள் எவ்வளவு அன்பு வைத்துள்ளனர் என்பது தெரிந்தது. மக்களின் உரிமைகளுக்காக ஒற்றுமையாகப் போராடுகிற தலைவர்களை இங்கே பார்க்க முடிந்தது" என்று பரவசத்துடன் விபரிக்கிறார் அலெய்டா குவேரா.

ஆர்ஜென்டீனாவில் பிறந்து கியூபப் புரட்சியில் பங்கேற்று அதில் வெற்றியும் பெற்று அதன் பின் பொலிவிய விடுதலைக்காகப் போராடச் சென்று உயிர் நீத்த மகத்தான புரட்சியாளர் சேகுவேரா. விடுதலை வேட்கையை மக்களின் மனதில் விதைத்த மாபெரும் தலைவரின் மகளான அலெய்டா குவேரா, கடந்த வாரம் சென்னை வந்தார். விகடனுக்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டி:

**"ஆர்ஜென்டீனாவில் பிறந்து கியூப விடுதலைக்குப் போராடி, பொலிவிய மண்ணில் மறைந்தார் உங்கள் தந்தை. உங்கள் தந்தையின் நாடாக எதைப் பார்க்கிறீர்கள்?"**

"சே யாரையும் உயர்வு, தாழ்வு என நினைத்ததில்லை. அவரது பார்வையில் எல்லா நாட்டு மக்களும் சமம் தான். உலக மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்கத்தான் போராடினார். அதனால் அவரை சர்வதேசியன் என்றே சொல்வேன்."

**"தீவிர புரட்சி, போராட்டம் என்று வாழ்ந்த உங்கள் தந்தைக்கும் உங்களுக்குமான குடும்ப உறவுகள் எவ்வாறு இருந்தன?"**

"என் நினைவில் என் தந்தை எப்போதும் அன்பு மிக்கவராகவே திகழ்ந்தார். குறிப்பாக கியூபாவின் அமைச்சராக இருந்த போது தினமும் 17 மணி நேரம் உழைத்தார். இருந்தும் ஓய்வு நேரங்களை எங்களோடுதான் செலவிட்டார்.

அவரை வெளியில் முரட்டுத் தனமானவராக பலரும் பார்க்கின்றனர். ஆனால் அவர் மிக மென்மையானவர். நானும் என் சகோதரன் கமிலோவும் அவரது தோள்களில் ஏறிக்கொண்டு குதிரைச் சவாரி செய்யச் சொல்லிக் கேட்போம். அவரும் சலிக்காமல் எங்களைச் சுமந்து கொண்டு வீட்டைச் சுற்றிச் சுற்றி விளையாட்டுக் காட்டுவார். எங்கள் தாயின் மேல் அளவு கடந்த அன்பை வைத்திருந்தார். அவருக்காக பல காதல் கவிதைகளை எழுதியுள்ளார்."

**"கியூப முன்னாள் ஜனாதிபதியான பிடல் காஸ்ட்ரோவைப் பற்றி"**

"என் தந்தை பொலிவியாவில் இறக்கும் போது எனக்கு 7 வயது. அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியை எங்களிடம் சொல்லி, ஆறுதல் செய்தவர் பிடல் காஸ்ட்ரோதான். அவரை 'தியொஸ்' (மாமா) என்றுதான் அழைப்பேன்.

அவ்வாறு அழைத்தாலும் எங்கள் குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு தந்தையாகவே இருந்தார். சொல்லப்போனால் தந்தை இல்லை என்ற எண்ணமே அவர் இருந்ததால் எங்களுக்கு எழவில்லை."

**"புரட்சியாளரின் மகளாக இருந்து கொண்டு இப்போது மருத்துவராகப் பணியாற்றும் அனுபவங்கள் எப்படி இருக்கின்றன?"**

"நான் ஒரு சாதாரண நபராகவே என்னை உணர்கிறேன். ஒரு புரட்சியாளரின் மகளாக இருப்பதால் மட்டுமே எனக்குப் பெருமை இருக்கிறது என்று எண்ணவில்லை. சொல்லப் போனால் பிறப்பு என்பது ஒரு மரபணு விபத்துதான்.

அதற்காக நான் எப்படி பெருமை கொள்ள முடியும்? நான் எனது வாழ்நாளில் எப்படி வாழ்கிறேன், நல்ல மனிதராக இருக்கிறேனா என்பதில்தான் எனது பெருமை உள்ளது.

சேகுவேராவின் மகள் என்பதால் மட்டும் எனக்கு எந்த முன்னுரிமையும் தரப்படவில்லை. நான் மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு, யாரும் எளிதில் அணுக முடியாத குக்கிராமங்களுக்குச் சென்று மருத்துவ சேவை செய்தேன்.

மத்திய அமெரிக்க நாடான நிகராகுவாவிலும் ஆபிரிக்க நாடான அங்கோலாவிலும் மருத்துவ சேவையைத் தொடர்ந்தேன். இன்றும் அப்பணிகளை மக்களுக்காகத் தொடர்கிறேன். ஆக மருத்துவராக என்னை அடையாளப்படுத்திக் கொள்வதையே பெருமையாகக் கொள்கிறேன்."

**"இன்றைய சூழலிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இதனை எதிர்கொள்ள பெண்களுக்கு நீங்கள் அறிவுறுத்துவது?"**

"கல்விதான் இங்கு பெண்களுக்கு இருக்கும் மிகப்பெரிய ஆயுதம். அது அவர்களுக்கு எழுதப் படிப்பதற்கு மட்டுமல்லாமல்,



ஆணாதிக்க சமூகத்திற்கு எதிராகப் போராடி சுயமாகச் செயற்படவும், சிந்திக்கவும் உதவுகிறது. பாதிக்கப்பட்டவர்கள், அடிமையானவர்கள் என்னும் நிலையிலிருந்து அவர்களை மீட்கிறது."

**"தற்போது உங்கள் நாடு சந்திக்கும் அரசியல் நெருக்கடி என்ன? அதை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?"**

"கியூபாவின் உள்ளே எந்த அரசியல் சிக்கலுமில்லை. ஆனால், அமெரிக்கா போன்ற நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் நிறைய பிரச்னைகள் உள்ளன.

எங்கள் மருத்துவர்களால் புதிய நோய்களுக்கான மருந்துகளைக் கண்டுபிடிக்க முடிகிறது.

ஆனால், அ[illegible]ருவாக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பிற நாடுகளிடம் இருந்தே பெற வேண்டிய சூழல் இருக்கிறது. ஏனெனில் அதை இறக்குமதி செய்ய எந்த நாட்டின் கப்பல் எங்கள் துறைமுகத்திற்கு வந்தாலும், அமெரிக்காவிற்குள் செல்ல 6 மாதத் தடை விதிக்கப்படுகிறது.

இதனால், பல நாடுகள் எங்களோடு வர்த்தகம் செய்ய அச்சப்படுகின்றன. ஆகவே, நாங்கள் மூன்று, நான்கு இடைத்தரகர்கள் மூலமாகவே மூலப் பொருட்களை வாங்குகிறோம்.

இது கடுமையான பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்துகிறது. இருந்தும் கியூபாவில் அனைவருக்கும் இலவசக் கல்வி, மருத்துவம் வழங்கப்படுகின்றன. சோசலிசத்தின் தேவை, நாங்கள் செயற்படுத்தும் மக்கள் நலத்திட்டங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் போன்றவற்றைக் குறித்து எங்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறோம்."

**"பொருளாதாரத் தடை விதித்த அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகளுக்கு கொரோனா கால கட்டத்தில் மருத்துவ உதவி செய்திருக்கிறீர்களே?"**

"சர்வதேசியம்தான் கியூப நாட்டின் அடித்தளம். உலகில் இருக்கும் அனைத்து மனிதர்களையும் நேசிப்பதே எங்கள் கொள்கை.

ஆகவே, எங்களையும் எங்கள் மருத்துவர்களையும் எதிர்க்கும் பிரேசில் போன்ற நாடுகளுக்கும் பிரச்சினை என்று வரும் போது உதவுகிறோம். மக்களுக்குப் பிரச்சினை என்று வரும்போது எங்கள் நாடு, எதிரி நாடு என்று பிரித்துப் பார்க்காமல் பாரபட்சமின்றி உதவிடுவோம். அதுவே அறம்."

(ஜீனியர் விகடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை வேண்டாமே!

விநோதமான பெயர்களில் விதம்விதமாக
வரும் போதைப்பொருள் பாவனையால்
சிந்திக்கும் ஆற்றல் அற்றுப் போகும்
கற்ற கல்வியும் காற்றோடு பறந்திடும்
போதை தலைக்கேற பாலியலுறவை
மனம் நாட வல்லுறவுகளும் அரங்கேறும்
போதைப்பொருள் வாங்குவதற்காய்
கொள்ளையும் கொலைகளும் செய்யும்
கொடுமையும் நடந்தேறும்
வாலிப வதனமும் வாடி வதங்கிடும்
உடல் மெல்ல மெல்ல வயோதிபத்தைத் தழுவிடும்
போதைப் பாவனையாளரை திருமணம் செய்ய
எந்தப் பெண்ணுமே உடன்படாளென்றால்
இல்லற வாழ்வும் எட்டாக்கனியாகி விடும்
திருமணமானோர் போதைக்கு ஆளானால்
பிள்ளைப் பாக்கியமே கிடைக்காதென
வைத்திய நிபுணர்கள் சொல்வதையும் கேட்டிடுவோம்
போதைப் பழக்கத்திற்கு அடிமையானால்
நோய்கள் பல தலைதூக்கும்
இள வயதில் வாழ்வும் முடிந்து விடும்
இதையெல்லாம் போதைப் பாவனையை நாடும்
இன்றைய இளைஞர்களுக்கு சொல்லிடுவோம்

கலாபூஷணம் சி.காசிப்பிள்ளை,
கொடிகாமம்.

# ஒரு விரல் புரட்சி !

கனவுகள் புதைந்த காரிருள் மண்ணில்
தேர்தலின் பெயரில் நடந்திடும் சதியால்

அரசியல் மேடையில் உருட்டிடும் பகடையில்
நசிந்திடும் எம் இன உயிர்களைக் காத்திட

உடைந்திடும் கட்சிகள் இணைந்திடும் போது
நடந்திடும் இன்றே எம் இன கனவு

தீர்வினை வேண்டிடும் எம் இனக் குரல்கள்
அழியுது இன்றும் துரோக வெறியால்

திரண்டிடும் கனவுகள் கல்லறைக் கோலமாய்
உறங்குது இன்றும் தமிழ் இன வடுவாய்

உறைந்திடும் உதிர ஆற்றினில் மூழ்கி
கிடக்குது இன்றும் எம் இன சமஷ்டி

ஒரு விரல் வாக்கினில் உரிமையை
செலுத்துவோம் ஈழ எழுச்சியைக் காண...

ந. விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.





# அனுபவிக்கத் தவறிய பொக்கிஷங்கள்

பச்சிளம் பருவத்திலே பரிவுடன் எமையணைத்து
பெற்றார் போல் பல மடங்கு
பாசத்தைப் பொழிந்து
பள்ளிக்குச் செல்லும் போது
எல்லையில்லா களிப்புக் கொண்டு
பருவத்தை அடைந்தவுடன்
பக்குவங்கள் சொல்லித் தந்து
வீட்டிலோர் நூலகமாய் விளங்கும்
பாட்டன் பாட்டியின் வளர்ப்பு
ஒரு விலைமதிப்பில்லா வரம்
இன்றைய காலத்தில்
யாருக்கும் கிடைக்காத ஒரு பொக்கிஷம்
ஆம்! பணம் தேடும் மனிதர்களின்
இயந்திர வேகத்திற்கு
ஈடு கொடுக்கத் திராணியற்று
முதியோர் இல்லங்களில்
முடங்கிக் கிடக்கின்றன - இன்றைய தலைமுறை
அனுபவிக்கத் தவறிய பொக்கிஷங்கள்.

இ.இளமதி
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# மௌனத்தின் தேடல்- 594



# அடக்க... அடங்கி

பொதுமக்கள் போராட்டம்
அதை அடக்க அரசு
நீர்த்தாரை; கண்ணீர்ப்புகை;
தடியடி; துப்பாக்கி ரவை
எல்லாமே தோற்றுப் போய்
தடுப்பு வேலியும் சரிந்த பின்
அடங்கிப் போனது அரசு

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

# மௌனத்தின் தேடல்- 595



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

# நியாயமடக்க

எரிபொருள் விலை ஏறிய போதிலும்
கைக்கு எட்டுவதா இல்லை
உணவுப் பொருட்களும்
உயர்விலையில்
வருமானமோ தாழ்நிலையில்
வாடித் தினறும் மக்களோ
நியாயம் தேடி வீதியில்
அதை யடக்கிட உல்லாச
ஆட்சியாளர்களின் படைகளோ
முழு முனைப்பில்

சி.இ.அன்புதுரை, சம்மட்டி ஒலை,
மானிப்பாய்.

# ஞானம்

அன்று முள்வேலி
இன்று இரும்புக் கேடர்கள்
தடுப்புச் சுவரானது
கடுப்புடன் மக்கள்
பொருளாதார நலன்கள்
பொருந்தாமல் போதையால்
உயிர் வாழ்தலை உறுதிப்படுத்த
உயிரைப் பணயம் வைக்கின்றார்
புள்ளடிகள் புனிதமாகும் போது
நல்லன யாவும் நாடிவரும்

க.நாகராசா, நுணாவில்.

# அரச படைகளுக்கு...

அறம் பிழைத்த அரசுக்கு
ஆட்சி செய்யத் தெரியுதில்லை
அனைத்து மக்கள் உரிமைதனை
அளிப்பதற்கு மனமும் இல்லை
அரச படைகளுக்கு மக்களை
அனுசரிக்க முடியுதில்லை
அசுரர் கை செங்கோலாய்
அடித்து நீர்த்தாரை எரிபுகையும்
ஆட்சி செயின் தருமம் என்னாகும்?

வைகதன்,
கொக்குவில்.

# நீதி பெறுவோம்

பாதை மறிக்கப்பட்ட
யானைக் கூட்டம் போல்
சுற்றி அலைகின்றோம்
நீதிக்காய்
தோல்வி அடைந்தாலும்
'பீனிக்ஸ்' பறவை போல்
போராடி நீதி பெறுவோம்
நம் இனத்துக்காய்

பிரகவி, கொக்குவில்.

# நீதி கோரி

உடைமைகள், உரிமைகள், உறவுகள் இழந்து
இழப்பதற்கு ஏதும்இன்றி ஏதிலியாய் மக்கள்
அடிமை விலங்கினை உடைக்க
வீதியில் இறங்கிய மக்கள் கூட்டம்
பொலிஸ் வீதித் தடை, கண்ணீர்ப்புகை,நீர்த்தாரை பிரயோகம்

கும்பவாழியான், உடுப்பிட்டி.

# ஆர்ப்பரிப்பு

பொருளாதார நெருக்கடி நீங்கிடவே போராட்டம்
பொறுமைதனைச் சோதிக்கும் போராட்டம்
துப்பாக்கியின்றியே சாத்வீகச் சதிராட்டம்
துன்பம் துயரம் நீங்கிடவே ஆர்ப்பாட்டம்

ஆ.செல்வி, திருநாவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 49

## எதிர்பாராத விபரீதம்

பெரும் முள்ளம்பன்றி போல் வெகு வேகத்துடன் தன் ராட்சத சரீரத்தைக் கொண்டு பாய்ந்த வில்வலனின் பட்டாக் கத்தியைச் சற்றுத் தூரத்திலேயே தடுத்து நின்றது இளையபல்லவனின் நீண்ட வாள்.

அந்த வாள் தன் வாளைப் போல் அத்தனை பட்டையில்லையென்றாலும் அது மிகவும் உறுதியாயிருந்ததை அதன் தாக்குதலினாலேயே உணர்ந்து கொண்ட வில்வலன் மீண்டும் மீண்டும் தன் வாளை இளையபல்லவனை நோக்கி வீசினான். ஒவ்வோர் முறையும் சர்வ சாதாரணமாக அந்த வாளைத் தடுத்தது இளைய பல்லவன் வாள்.

நேரம் ஓடியதே தவிர, சண்டை ஒரு முடிவுக்கு வரவில்லை. வில்வலன் ஓடி ஓடித் தாக்கினான். இளையபல்லவனைச் சுற்றிச் சுற்றி வந்து பல திக்குகளிலும் தாக்கினான். ஆனால் நின்ற இடத்தை விட்டு இரண்டு அடிகளுக்கு மேல் நகராத சோழர் படைத்தலைவன் வில்வலனின் வாளை மெல்லத் திருப்பியே தன் வாளால் மடக்கினான்.

அந்தப் போர் செல்லும் முறையைச் சந்தேகத்துக் இடமின்றிப் புரிந்துகொண்ட பலவர்மன் ஓரளவு சாந்தியடைந்தான். அதிகமாகக் குதிப்பதாலும் தாவுவதாலும் கையை வேகம் வேகமாகத் தூக்கித் தூக்கிக் கீழே கொண்டு வருவதாலும் வில்வலன் தன் சக்தியின் பெரும் பாகத்தை இழந்துவிட்டதையும் உடலெல்லாம் வியர்த்து உடை நனைந்து பெருமூச்சு விட ஆரம்பித்து விட்டதையும் இளையபல்லவனோ தன்னை எந்த விதமாகவும் சளைக்கும்படி செய்து கொள்ளாமலும் தற்காப்புப் போர் செய்வதையும் கண்டு முடிவு பயங்கரமாயிருக்காதென்று தீர்மானத்துக்கு வந்தான் அக்ஷய முனைத் தலைவன்.

போரின் போக்கு, கொள்ளையருக்கும் புரிந்ததால் அவர்கள் ஆனந்தக் கூச்சலிட்டார்கள். ஆரம்பத்தில் திகைத்த அவர்கள் மாதர்களிற் சிலர், வில்வலன் ஓடிக்குதிப்பதைக் கண்டு கேலி செய்து நகைக்கவும் முற்பட்டார்கள். வில்வலன் நிதானமிழந்தான்.

முன்னைவிட அதிவேகத்துடன் போரிட்டான். போரிடப் போரிட எதிரே வாளைச் சுழற்றிய வாலிபனின் பலமும் சாமர்த்தியமும் அவனுக்குத் தெள்ளெனப் புரியலாயிற்று. தான் அதுவரை வாழ்வில் சந்திக்காத ஓர் இணையற்ற வாள் வீரனைச் சந்தித்து விட்டதையும் ஆழம் தெரியாமல் காலிட்டுக் கொண்டதையும் உணர்ந்த வில்வலன். வேண்டுமென்றே எலியுடன் விளையாடும் பூனை போலத் தன்னுடன் இளையபல்லவன் விளையாடுகிறான் என்பதையும் புரிந்து கொண்டான். ஆனால் அவன் இதயத்தில் அச்சமும் புகுந்து கொண்டது. தன் மரணம் சமீபித்து விட்டதை அறிந்த வில்லவன் வீர மரணம் எய்தத் துணிந்து. இளைய பல்லவனை வெகு அருகில் நெருங்கித் தன் வாளை நன்றாக வானில் ஓங்கி திடீரென இளைய பல்லவனின் தலையின் மீது இறக்கினான்.

வில்வலன் பார்வையிலிருந்த உறுதி. வாள் இறங்கிய வேகம், இரண்டையும் கண்ட கூட்டம் இளையபல்லவன் இறந்தான் என்றே தீர்மானித்தது. அந்தத் தீர்மானத்தால் சோக மூச்சுவிட முயன்ற மறுகணமே கூட்டத்தின் சோக மூச்சு மகிழ்ச்சி கூச்சலாக மாறியது. அடுத்தகணம் வில்லவனின் பெரிய வாள் ஆகாயத்தில் பறந்து பந்த ஒளிகளில் பளபளத்த வெகு தூரத்தில் போய் விழுந்தது. இரவு நிகழ்ச்சி அந்தக் கட்டத்துடன் முடிந்திருந்தால் மகிழ்ச்சி முடிவு அன்று ஏற்பட்டிருக்கும். ஆனால் அடுத்த விநாடியே எதிர்பாரத விபரீதமொன்று அங்கு நிகழ்ந்தது. ஒரு கொலை நடக்கவே நடந்தது. இரத்தக்கறை மணலில் படிந்தது.

(தொடரும்...)



# அதிசயங்களை விஞ்சிய பேரதிசயங்கள்

இதுவரை உலக அதிசயங்கள் என்று அடையாளம் காணப்பட்ட அல்லது பட்டியலில் விடுபட்டுப் போனவை என்று குறிப்பிடப்பட்ட இடங்கள் யாவும் இயற்கையின் பேரெழில் பரிமாணங்களாக இருக்கும் அல்லது ஏதேனும் ஒரு நிறுவனத்தின், அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டுழைப்பின் வார்ப்புகளாக இருக்கும்.

ஆனால் முழுக்க முழுக்க ஒரு தனிமனிதன் தன்னுடைய உழைப்பு மற்றும் கலைத்திறனால் உருவாக்கிய வனப்பு மிக்க பூங்கா ஒன்று இருக்கிறது. அதுவும் நம் இந்தியாவிலேயே... அதனைப்பற்றிச் சொல்லாமல் இந்த நூல் முழுமையடையாது.

சண்டிகர் நகருக்கு அருகில் உள்ள வனப்பகுதி ஒன்றில் இருக்கும் சுக்னா ஏரிக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் நேக்சந்த் பாறைப் பூங்கா தனித்துவமிக்கது. உபயோகமற்றது என்று வீட்டிலிருந்தோ, தொழிற்சாலையில் இருந்தோ தூக்கி வீசப்பட்ட பொருட்களைக் கொண்டு நேக் சந்த் என்ற தனிமனிதன் எவருடைய உதவியுமின்றி, யாருக்கும் தெரியாமல் அந்த பூங்காவை உருவாக்கினார்.

பூங்கா என பெயரிடப் பட்டதால் அது ஒரு பூந்தோட்டம் என்று நினைத்துவிட வேண்டாம். அதற்குள் ஒரு செயற்கை அருவி, ஆண்பெண் உருவச்சிலைகள், விலங்குகளின் உருவங்கள், பாறைகளை சிதைக்காமல் அதை தன் போக்கிலேயே திருத்தியமைக்கப்பட்ட கண்களுக்கு விருந்தளிக்கும் வடிவங்கள், மரத்துண்டுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நிழல் குடில்கள், சிறுநீரோடை இப்படி அனைத்தையும் நேக் சந்த் ஒருவரே உருவாக்கியிருக்கிறார்.

நேக் சந்த் 1924 ஆம் ஆண்டு குர்தாஸ்பூர் மாவட்டத்தில் சகார்க்கர் என்னும் ஊரில் பிறந்தார். அந்த ஊர் இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்தியாவின் சண்டிகரில் அவரது குடும்பம் குடியேறியது. தனது கல்லூரிப் படிப்பை முடித்ததும் 1951 ஆம் ஆண்டு மாநில பொதுப் பணித்துறையில் சாலைப் பராமரிப்புப் பிரிவில் அதிகாரியாக சேர்ந்தார்.

1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சண்டிகர் நவீன சுவிஸ் மற்றும் பிரெஞ்சு பாணியில் புதிய நகரமாக வடிவமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக சண்டிகர் நகரை தூய்மைப் படுத்தும் திட்டத்தின் கீழ் தெருவில் தொழிற்சாலைகளில் வீசப்பட்டப் பொருட்களை அப் புறப்படுத்தும் பணி நேக் சந்த்துக்கு தரப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

327

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## புதிய வாழ்க்கை முறைமைக்கு இசைவாக்கம் அடைய...

சலரோகமானது நீடித்து நிலைக்கும் ஒரு நாட்பட்ட நோயாக இருப்பதனால் அந்நோயினால் பாதிக்கப்படுபவர்கள் அந்நோயினை ஏற்றுக் கொண்டு அதற்கான பரிகாரங்களைத் தேடுவதோடு, தமது வாழ்க்கை முறைமைகளிலும் பல அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு வாழ வேண்டியிருக்கின்றது. சலரோகம் உடையவர்கள் தமது குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவை கவனமாகப் பேணுவது மட்டுமல்லாமல் வழமையான தமது உணவுப் பழக்கத்திலும் உடல் தொடர்பான பழக்கவழக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியிருக்கும். ஒருவகையில் இதனை (வாழ்வின்) ஒரு பண்பாட்டு மாற்றம் எனவும் அழைக்கலாம்.

சலரோகம் ஒருவருடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கும் வல்லமையுடையது. ஒருவர் தனது உணவுகளைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவும் உணவு உள்ளெடுக்கும் அளவுகளில் மாற்றங்களைக் கொண்டு வரவும் பழகவேண்டியிருக்கும்.

அவர் தனது உடலை அக்கறையோடு பேணிப் பராமரிக்க வேண்டியிருக்கும். பாதங்களை முகத்துக்குச் சமனாகப் பாதுகாக்கவும் நகங்களை அக்கறையோடு அவதானித்து அளவுபடுத்தவும் வேண்டியிருக்கும். மருந்துகள் பற்றி அறிந்து அவற்றைச் சரியான அளவுகளிலும் நேரங்களிலும் உள்ளெடுக்க வேண்டியிருக்கும்.

ஊசிமருந்துகள் பாவிப்பவராக இருந்தால் அவர் அது தொடர்பான பாதுகாப்புப் பொறிமுறைகளையும் அறிந்து இருக்க வேண்டும். குருதியில் குளுக்கோஸ் கூடவும் விடாமல் குறையவும் விடாமல் இருப்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். தனது குருதியையும் சிறுநீரையும் தானே பரிசோதிக்கும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சலரோகமானது ஒருவருடைய வாழ்க்கையை மாற்றியமைக்கின்றது. சலரோகம் வருவதற்கு முன்பு தாம் வாழ்ந்த வாழ்க்கை முறைமைகளை மாற்றிக் கொண்டு இப்போது சலரோகத்துடன் இணைந்ததான வாழ்வை வாழ்வது என்பது உண்மையில் சவால்கள் நிறைந்த ஒன்றாகவே இருக்கின்றது. பலர் இந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு இசைவாக்கம் அடைந்து சலரோகத்துடனான வாழ்வை ஆரோக்கியமான பாதையில் கொண்டு செல்கிறார்கள். எனினும் சிலர் இந்தச் சவால்களை எதிர்கொள்ளமுடியாது புதிய வாழ்க்கை முறைமைக்கு இசைவாக்கம் அடைய முடியாது கஷ்டப்படுகிறார்கள். இவ்வாறானவர்கள் பதகளிப்பு, இசைவாக்கக் கோளாறு, மனச்சோர்வு, உணர்ச்சிக் கோளாறுகள் போன்ற உள நலப்பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்.

எமது வாழ்வு மாற்றங்களைவேண்டி நிற்கும் வேளைகளில் அந்த மாற்றங்களுக்கான தேவைகள் பற்றி நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது முக்கியமாகின்றது. இந்த அறிதலே மாற்றங்களை ஊக்குவிக்கும் பிரதான காரணியாக அமைகின்றது. மாற்றங்கள் தேவை என நாம் உணரத் தலைப்படும் வேளைகளில் அந்த மாற்றங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கான திட்டமிடுதல் அவசியமாகின்றது. திட்டமிடுதல் சீராக நடைபெறுகின்றபொழுது அத்திட்டங்களிற்குச் செயல்வடிவம் கொடுப்பது என்பது இலகுவாகின்றது. திட்டங்களைச் செயற்படுத்தும் பொழுது அவை எப்பொழுதும் வெற்றியளிக்க வேண்சோர்வு, உணர்ச்சிக் கோளாறுகள் போன்ற உளநலப் பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்.

எமது வாழ்வு மாற்றங்களை வேண்டி நிற்கும் வேளைகளில் அந்த மாற்றங்களுக்கான தேவைகள் பற்றி நாம் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது முக்கியமாகின்றது. இந்த அறிதலே மாற்றங்களை ஊக்குவிக்கும் பிரதான காரணியாக அமைகின்றது. மாற்றம் என்றில்லை. வெற்றிகளை அடைய முடியாதபோது நின்று நிதானித்து அவ்வாறு அடைய முடியாததற்கான காரணங்களை ஆராய்ந்து மாற்று வழிகளை யோசித்து மீண்டும் முயற்சி செய்தல் அவசியமாகின்றது.

சலரோகம் உடைய ஒருவர் தனது வாழ்வின் நடைமுறைகளை மாற்றியமைக்கும்போது அந்த மாற்றங்களைத் தட்டிக் கொடுத்து அவரது நடத்தைகளை ஊக்குவித்தல் அவசியமாகின்றது. இவ்வாறு நிகழும் பொழுதே அவரில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிலையான மாற்றங்களாகப் பரிணமிக்கும் வாய்ப்புகள் அதிகமாகின்றன. ஒருவர் தனது பழக்கவழக்கங்களை மாற்ற முனைகையில் அவரைச் சீண்டி வேடிக்கை பார்ப்பது தவறானது. உண்மையில் தமது வாழ்க்கை முறைமைகளில் மாற்றங்களை உருவாக்குவதன் மூலம் சலரோகம் உடையவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியமாக இருப்பதனை உறுதிசெய்து கொள்ளலாம். சலரோகத்துடன் வாழ்வது என்பது சிலவேளைகளில் பல உள, சமூகப் பிரச்சினைகளை உருவாக்கி விடலாம்.

நோய் பராமரிப்பிற்கான நேரம், அதற்கான செலவு,நோயுடன் தொடர்புடைய மருத்துவச்சிக்கல்கள், அடிக்கடிமேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகள், மருத்துவமனை அனுமதிகள், மருந்துகளுடனான வாழ்வு போன்ற பல காரணிகள் ஒருவர் தனது வாழ்வை அதிகம் அலட்டிக் கொள்ளாது இலகுவாகக் கொண்டு செல்வதனைப் பாதித்து விடலாம்.

எனவே சலரோகம் வந்தவர்கள் மிக அதிகளவில் மனக்குழப்பங்களுக்கு ஆளாகக் கூடிய வாய்ப்புகள் (இடர் தகவுகள்) இருக்கின்றன. மறுபுறத்தில் ஏற்கனவே உள நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமது ஆர்வமின்மை, ஊக்கக் குறைபாடு, உடற்பயிற்சி இன்மை, மருந்துகளின் பக்க விளைவுகள், ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் தொடர்பான அலட்சியப்போக்கு போன்ற பல காரணங்களினால் சலரோக நோய் உருவாகுவதற்குரிய ஏது நிலைகளை அதிகளவில் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றோடு சலரோகம் உடையவர்கள் புகைப்பழக்கத்தினைக் கடைப்பிடிக்கின்ற பொழுதும் மதுபாவனையைத் தொடர்கின்ற பொழுதும் அவை சலரோக நோயின் தாக்கங்களை அதிகரித்து விடுகின்றன.ஒருவருக்கு உளநோயும் சலரோகமும் இணைந்திருக்கின்ற பொழுது அவையிரண்டையும் முகாமைத்துவம் செய்வது என்பது மிகவும் சவாலான பணியாக அமைந்து விடுகின்றது.

சலரோக நோயாளிகளுக்கு உள நலப் பிரச்சினைகள் அதிகளவில் ஏற்படலாம் என்பதனை ஏற்றுக் கொள்ளுதல் முக்கியமானது.

எனவே அவை அவ்வாறு அதிகளவில் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதனைச் சிந்தித்தல் முக்கியமானது. குறிப்பிட்ட இடைவெளிகளில் குருதிப் பரிசோதனைகளைச் செய்வதனூடாக சலரோகத்தினை நேரகாலத்துக்கே அடையாளம் காணுவது நல்லது. சலரோகம் ஏற்பட்டு விட்டது என்பதனை அறிந்தவுடனேயே துறைசார் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது அவசியமானது.

சலரோகம் பற்றி ஓரளவு பூரணமாக அறிந்து கொள்வதும் அது தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதும் மரபுவழிநம்பிக்கைகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்வதும் முக்கியமானது. மருத்துவ ஆலோசனையில் சொல்லப்படுகின்ற விடயங்களைக் கவனமாகப் பின்பற்றுவதும் மிகுந்த பயன்மிக்கது.

நாம் நெருக்கீடாக உணர்ந்து கொள்ளும் வேளைகளில் எல்லாம் எமது உடல் தொழிற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் எமது ஆரோக்கியத்தைப் பாதித்து விடுவதாகவே அமைந்து விடுகின்றன. சலரோகமும் இதற்கு விதிவிலக்கல்ல. நெருக்கீடான உணர்வுகள் சலரோகத்தின் கட்டுப்பாட்டையும் எதிர்மறையாகப் பாதித்து விடுகின்றன. எனவே சலரோகம் வந்தவர்கள் இயலுமான வரைக்கும் நெருக்கீடுகளுக்குள் ஆளாகாமல் அல்லது நெருக்கீட்டு நிலைமைகளை சமாளித்துக் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகிறது.

யோகா தொடர்பான பயிற்சிகளும் தியானமும் பண்பாட்டோடிசைந்த தளர்வுப் பயிற்சிகளும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு வாழ்வில் முன்செல்லும் திறன்களும் கோபத்தைக் கையாளும் வழிமுறைகளும் ஒருவர் இயல்பாகவே தளர்வாக இருப்பதனை உறுதி செய்வதுடன் நெருக்கீட்டு நிலைமைகள் ஏற்படுகின்ற பொழுது அதனை அதிக நெருக்கீடாக உணராமல் அதனைச் சமாளிக்கும் தன்னியல்பையும் வளர்த்து விடுகின்றன.

தமது மனங்களில் நெருக்கீட்டையோ அல்லது வேறு விதமான எதிர்மறை உணர்வுகளையோ அல்லது குழப்பமான நிலையையோ உணர்ந்து கொள்பவர்கள் அது பற்றித் தமது வழமையான மருத்துவருடன் உரையாட வேண்டியது அவசியமானது.

அந்த மருத்துவர் அவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளை வழங்குவதுடன் தேவைப்படின் துறைசார் மருத்துவ நிபுணர்களிடமோ அல்லது பொருத்தமான வளவாளர்களிடமோ அவர்களை வழிப்படுத்துவார். மறுதலையாக உளநலப் பிரச்சினைகள் தொடர்பான பயமோ களங்க மனப்பாங்கோ இல்லாதவர்கள் தமது உள நலம் சார்ந்த பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளையும் சிகிச்சையையும் பெற்றுக் கொள்வதற்கு தமக்கு அருகாமையிலிருக்கும் ஓர் உள நலப் பிரிவைத் தொடர்பு கொள்ளலாம்.

**Dr.சா.சிவயோகன்,**
**உள மருத்துவ நிபுணர்.**


**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டைகளை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் நுகர்வோர் விவகார அதிகார சபை கடந்த 20 ஆம் திகதி முட்டை விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.



அதன்படி வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாவாகவும் சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவாகவும் காணப்பட்டது.

இருப்பினும் வர்த்தமானி அறிவித்தலையும் மீறி அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காண்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை அண்மையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அதன்படி தெஹிவளையில் பகுதியில் கட்டுப்பாட்டு விலையையும் மீறி அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தக நிலையத்திற்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்க கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் கொழும்பு பிரதேசங்களுக்கு முட்டைகளை கொண்டு வந்து விநியோகிக்கும் பிரதான வர்த்தக நிறுவனத்திற்கும் மற்றும் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் மொத்த மற்றும் சில்லறை முட்டைகளை விற்பனை செய்யும் கடையொன்றிற்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் கொழும்பு நீதவான் நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நிச்சயம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

நாங்கள் ஒரு நிறுவனத்திடம் அனுமதி பெற வேண்டும். எனினும் எங்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எதிர்வரும் நாட்களில் அனுமதி கிடைத்தால் முட்டையை இறக்குமதி செய்வோம் எனத் தெரிவித்தார். (நி)

# கொக்கட்டிச்சோலை படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படு கொலையின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



மட்டக்களப்பு மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

28-01-1987 மற்றும் 12-06-1991 ஆகிய காலப்பகுதிகளில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மகிழடித்தீவு இறால் பண்ணை மற்றும் கொக்கட் டிச்சோலை ஆகிய பகுதிகளில் 239 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் முதியவர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:45 சூரி 4 செவ் 3 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண்<br>தொ.இ: B/10547 | பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 67 சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/11908 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா:56 சூரி 5 செவ் 2 இல்<br>உயரம் :5' 2"<br>தகைமை/தொழில்:O/L பாடசாலை காவலாளி<br>எதிர்பார்ப்பு: A/L படித்தபெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10550 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா:30 சூரி 2 செவ் 12 இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:IT Officer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/11910 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 32 ½ சூரி 10 செவ் 2 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: Cma Managerial level completed. (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: B/10558 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 18 ¼ சூரி. செவ் 4 இல்<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்<br>தொ.இ: G/11913 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பரணி 2<br>கி.பா:65 சூரி 9 செவ் 1 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன்<br>தொ.இ: B/12069 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா:41 சூரி. செவ் 7 இல்<br>உயரம் :5' 3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது லண்டன்<br>தொ.இ: G/11917 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## அபிவிருத்தி லொத்தர் சபை வரலாற்றின் முதல் முறையாக 3 பில்லியன் ரூபாய் இலாப மீட்பு

ஜனாதிபதி நிதியத்தின் பொது சேவைக்காகவும் மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கும் நிதி திரட்டும் முகமாக 1997, 20 ஆம் இலக்க சட்டம் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபை 2022 ஆம் ஆண்டு தனது வருடாந்த வருமான இலக்குகளை அடைந்து வரலாற்றின் முதல் முறையாக 3 பில்லியன் ரூபாய் இலாபத்தினை ஈட்டி சாதனை படைத்துள்ளது.

கொவிட் நோய் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக 2022 ஆம் ஆண்டு அரச மற்றும் தனியார் துறைசார் அனைத்து வணிக நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பல நாட்களாக செயலிழந்து காணப்பட்டதும், அதன் காரணமாக தமது வியாபார இலக்குகள் மற்றும் வருடாந்த வருமான இலக்குகளை அடைய முடியாத அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவும் காணப்பட்டன. அபிவிருத்தி லொத்தர் சபையின் வியாபார நடவடிக்கைகளுக்கும் மேற்கூறப்பட்ட சவால்கள் நேரடியாக தாக்கம் செலுத்திய போதும் அதனை சிறப்பாகக் கட்டுப்படுத்தவும் முகாமை செய்யவும் தற்போதைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கும் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கும் முடிந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 40 வருட வரலாற்றில் நிறுவனம் முகங்கொடுத்த அனைத்து சவால்கள் மற்றும் இன்னல்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக் கூடிய விற்பனை வலைப்பின்னல் ஒன்று நிறுவனத்திற்கு இருத்தல், நிறுவனத்தின் முகாமைத்துவம் மூலம் எடுக்கப்படும் நித்தம் புதுப்பிக்கப்படும் சந்தைப்படுத்தல் திட்டங்கள் மற்றும் உபாயங்களுக்கு இணைய செயற்படும் மாவட்ட விற்பனை விநியோக முகவர்கள் மற்றும் விற்பனை முகவர் வலைப்பின்னலும் அவர்களின் கீழ் கடமையாற்றும் 20,000 இற்கும் அதிகமான விற்பனை உதவியாளர் குழு மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடும் நிறுவனத்திற்கு பாரிய சக்தியாக அமைகின்றது. மேலும் தற்போதுள்ள பொருளாதார சவால்கள் மத்தியில் தமது லொத்தர் வியாபாரத்தினை பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்கள் ஆற்றும் சேவை மிக முக்கியமானதென்று அபிவிருத்தி லொத்தர் சபை கூறுகின்றது.

பணப்பரிசுகளாக 10 பில்லியன் ரூபாய்க்கு அண்மித்த தொகையினை சுப்பர் பரிசுகள், முதல் பரிசுகள், இரண்டாம் பரிசுகள், மூன்றாம் பரிசுகள் மற்றும் ஏனைய பரிசுகளாக 2022 ஆம் ஆண்டு தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளதுடன், விற்பனை முகவர்களுக்குரிய கமிஷன் பணமாக 3 பில்லியன் ரூபாய்க்கு அதிகமான பணம் வழங்கப்பட்டுள்ளதுடன், அரசு மூலம் விதிக்கப்பட்ட அனைத்து வரிச் செலவுகளாக 837 மில்லியன் ரூபாய் பணம் அரசுக்கு வழங்கி, ஏனைய செலவுகளையும் மேற்கொண்ட பின்னர் அபிவிருத்தி லொத்தர் சபை 3 பில்லியன் ரூபாய்க்கு அதிகமான இலாபத்துடன் 19 பில்லியன் ரூபாய்க்கு அதிகமாக விற்று முதலினை பெற்றுக்கொள்ள முடிந்தது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறிவித்தது.

விசேடமாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவர் மற்றும் முகாமைத்துவத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் 2022 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் தொடர் இவ் வெற்றியினை பெற்றுக்கொள்வதற்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது என நிறுவனம் சுட்டிக் காட்டியது. அதன்போது அனைத்து பிரதேசங்களிலும் விநியோக விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கு அவர்களின் வருடாந்த விற்பனை முகவர் சந்திப்புக்களை "சங்வர்தன அபிமன்" எனும் பெயரில் புதிய வடிவமைப்பில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முன்னைய சம்பிரதாயங்களை விட வேறுபட்ட விசேட விற்பனை முகவர் சந்திப்புக்களுக்கு நேரடியாக தொடர்பு படும் பிரதேச அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் உள்ளடங்கலாக அதிகார அமைப்பின் பிரமுகர்களையும் அழைத்து விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களின் நீண்ட கால பிரச்சினைகளை தீர்க்க வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறே ஆண்டில் அதிக விற்பனையினை மேற்கொண்ட மாவட்டத்தின் சிறந்த விற்பனை முகவர்களை பாராட்டுதல், அவர்களுக்கு பரிசுப் பணம் மற்றும் சான்றிதழ்களை வழங்கல் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. இந் நிகழ்ச்சிகளில் புதிய முறையில் அவர்களை ஊக்கமளித்தல் 2022 ஆம் ஆண்டு வெற்றியடைய காரணமாக அமைந்தது. மேலும் சபையின் சிரேஷ்ட முகாமைத்துவம் தனது கடமைகளின் மத்தியில் மாவட்ட ரீதியில் விற்பனை தொடர்பாக வேறு வேறாக தேடிப்பார்த்து செயற்படவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் விற்பனை வலைப்பின்னலின் சிறிய குழு சந்திப்புக்களை நடத்தி, பல பிரதேசங்களில் உள்ள லொத்தர் குடில்களுக்கு தனிப்பட்ட ரீதியாக சென்று விற்பனை உதவியாளர்களுக்கு உள்ள குறைகளை தேடிப் பார்த்து, அவர்களை ஊக்குவித்து, அபிவிருத்தி லொத்தர் சபை குறித்த நம்பிக்கையினை ஏற்படுத்தி அதனூடாக மென்மேலும் லொத்தர் விற்பனையினை அதிகரிக்கச் செய்தல் இவ் வெற்றிக்குரிய இன்னுமொரு காரணமாக அமைந்தது. நாளாந்த லொத்தர் விற்பனையினை அதிகரிக்கச் செய்வதற்கு நடைமுறையில் உள்ள லொத்தர்களின் பரிசமைப்புக்களை கண்கவர் வண்ணம் மாற்றியமைத்து, அவ் லொத்தர்களில் மாதாந்தம் விசேட சீட்டிழுப்புக்களை மேற்கொண்டமை இவ்வாறு வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான மேலும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலக்காக கொண்டு புதிய நிகழ்ச்சிகள் பலவற்றினை செயற்படுத்துவதற்கும் அப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மொழி பேசும் மக்களை இலக்காக கொண்டு, தெற்கு மக்கள் இடையேயும் புதிய லொத்தராக விரிவாக்கம் செய்து அதிகதிகமாக பரிசுகள் கிடைக்கும் வண்ணம் பரிசமைப்புக்களை தயாரித்து "வலம்புரி" எனும் பெயரில் புதிய லொத்தர் ஒன்றினை அறிமுகப்படுத்தியமையும் விசேட விடயமாக அமைந்துள்ளது. கடந்த வருடத்தில் நாளாந்த லொத்தர் சீட்டிழுப்புக்களின் போதான அதிக விற்பனையினை மேற்கொள்வதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு முடிந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வெற்றிகரமான 40 ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடும் அபிவிருத்தி லொத்தர் சபை தமது நிறுவன சின்னத்துடன் புதிய கண்கவர் வியாபார சின்னத்தினையும் அறிமுகப்படுத்தி, நாளுக்கு நாள் முன்னேறும் புதிய லொத்தர் சந்தையினையும் புதிய தொழில்நுட்பத்துடனான இளைஞர் அணியினையும் இதுவரை எம்முடன் கைகோர்த்துள்ள வாடிக்கையாளர்களையும் இணைத்தல் இப் புதிய வியாபார சின்னத்தினை அறிமுகப்படுத்துவதன் முக்கிய நோக்கமாக அமைந்ததாக அறிவிக்கப்படுகின்றது. மேலும் இவ் லொத்தர் வியாபாரத்தில் புதிய சீட்டிழுப்பு முறைகளை அறிமுகப்படுத்தி பழைய லொத்தர்களுக்கு பதிலாக புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்தலினூடாக 2023 ஆம் ஆண்டுக்குரிய நிதி இலக்குகளை அடைந்து அதிக வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை எதிர்ப்பார்க்கின்றது. நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக மிகப் பெரிய மக்கள் சேவையினை மேற்கொள்ளும் ஜனாதிபதி நிதியத்திற்கும் நாட்டின் கல்வியில் சிறந்த சந்ததியினரை உருவாக்கும் மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிக பங்களிப்பினையும் வழங்க இலாபத்தினை ஈட்டி நிதியங்கள் இரண்டினை திறப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னைய ஆண்டுகளை விட அதிக அதிகமாக வெற்றியாளர்களை உருவாக்கவும் நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தியாக அமைந்த தொழில்முனைவோரையும் உயர் பொருளாதார தரத்திலான மக்களையும் உருவாக்குவதற்கு மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் அபிவிருத்தி லொத்தர் சபை எதிர்பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவின் 74 ஆவது குடியரசு தின விழா கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இடம்பெற்ற குடியரசு தின நிகழ்வுகளில் எகிப்து ஜனாதிபதி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

## பிரார்த்தனைக்காக கூடியிருந்தோரில் எழுவர் ஜெருசலேமில் சுட்டுக் கொலை

(ஜெருசலேம்)

கிழக்கு ஜெருசலேமில் உள்ள ஒரு ஜெப ஆலயத்தில் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு மூன்று பேர் காயமடைந்தனர்.



தாக்குதல் நடத்தியவர் பயங்கரவாதி என்று பொலிஸார் தெரிவித்த போதும் உள்ளூர் ஊடகங்கள் அவரை கிழக்கு ஜெருசலேமைச் சேர்ந்த பாலஸ்தீனியர் என அடையாளம் கண்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய பொலிஸ் ஆணையாளர் கோபி ஷப்தாய், 'சமீபத்திய ஆண்டுகளில் நாங்கள் சந்தித்த மிக மோசமான தாக்குதல்களில் இதுவும் ஒன்று'

யூதக் குடியேற்றத்தில் உள்ள ஒரு ஜெப ஆலயத்தில் பிரார்த்தனைக்காக இஸ்ரேலிய வழிபாட்டாளர்கள் கூடிய போது இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரி சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் துப்பாக்கிதாரி ஓட்டியதாகத் தோன்றும் வெள்ளை நிற கார் குறித்து தடயவியல் குழு விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## உளவு செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியது ஜப்பான்

(டோக்கியோ)

உளவு செயற்கைக்கோளை ஏற்றிச் செல்லும் ரொக்கெட்டை ஜப்பான் வெற்றிகரமாக ஏவியுள்ளது.வட கொரியாவில் உள்ள இராணுவ தளங்களில் நகர்வுகளைக் கண்காணிக்கவும் இயற்கை பேரிடர்களில் இருந்து தற்காத்துக் கொள்ளவே குறித்த செயற் கைக்கோள் ஏவப்பட்டுள்ளது.

ஐஜிஎஸ் ரேடார் 7 என்ற உளவு செயற்கைக்கோளைச் சுமந்து செல்லும் எச்2ஏ ரொக்கெட் மிட்சுபிஷி ஹெவி இண்ட ஸ்ட்ரீஸ் லிமிடெட் மூலம் தென் மேற்கு ஜப்பானில் உள்ள தனேகாஷிமா விண் வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது.

இச்செயற்கைக்கோள் பின்னர் அதன் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## வயதைக் குறைக்க பலகோடி செலவழிப்பு

(கலிபோர்னியா)

கலிபோர்னியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது வயதை 18 ஆக குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தற்போது 45 வயதான பிரையன் ஜான்சன் எனும் இந்த நபர் தனது வயதை 18 ஆகக் குறைப்பதற்கு வருடாந்தம் 16 கோடி ரூபாய் செலவிடுவதாக கூறப்படுகின்றது.

30 மருத்துவர்களைக் கொண்ட குழுவினால் தனது ஒவ்வொரு உடல் உறுப்புகளினதும் வயதைக் குறைக்கும் முயற்சியை அவர் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## வரலாறு காணாத வீழ்ச்சியில் பாகிஸ்தான் ரூபாய்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாவின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்துள்ளது.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி யுள்ளதன் காரணமாக உணவுப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தடுப்பாடு, விலைவாசி உயர்வு என பல்வேறு பிரச்சினைகளை பாகிஸ்தான் சந்தித்து வருகிறது. கடும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேச நிதி அமைப்புகளிடம் பாகிஸ்தான் கடன் வாங்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வரும் சூழ்நிலையில் அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாவின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒரு அமெரிக்க டொலர் பாகிஸ்தான் ரூபாவில் 262.6 ரூபாவாக உள்ளது. ரூபாவின் வீழ்ச்சி பாகிஸ்தானின் பொருளாதாரத்தை மேலும் பின்நோக்கி இழுத்து சென்றுள்ளது.

அதேவேளை கடந்த ஆண்டு இலங்கையும் இவ்வாறான கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த நிலையில் தற்போது மெல்ல மெல்ல மீண்டு வருகின்றது. (நி)

## உக்ரைனுக்கு போர் டாங்கிகளை அனுப்பும் அமெரிக்கா

### வடகொரியா கண்டனம் தெரிவிப்பு

(பியாங்யாங்)

ரஷ்யப் படைகளை எதிர்த்துப் போரிட உதவும் வகையில் போர் டாங்கிகளை உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்காவின் முடிவை வடகொரியா கண்டித்துள்ளது.

மொஸ்கோவை அழிக்க வடிவமைக்கப்பட்ட "ப்ரொக்ஸி போரை" அமெரிக்கா தீவிரப்படுத்தி உள்ளதாக வட கொரியத் ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரி குற்றம் சாட்டியுள்ளார்.

உக்ரைனுக்கு இராணுவ தளபாட வசதிகளை வழங்குவதன் மூலம் அமெரிக்கா போர் நிலைமையை அதிகரிப்பது குறித்து தீவிர கவலை வெளியிட்டுள்ளார்.

ரஷ்யா வின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலையும் சவாலையும் முன்வைத்து, சூழ்நிலையை மேலும் மோசமாக்க அமெரிக்கா முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் கருத்துக்கள், உக்ரைனுடனான போரில் ரஷ்யாவுடன் வட கொரியாவின் ஆழமான ஒத்துழைப்பை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. (நி)

UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVOTEC
UNIVERSITY COLLEGE OF JAFFNA
University of Vocational Technology
Ministry of Education
Applications are open for the following Diploma courses

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

Closing Date 28th February 2023

Accreditation QMS TVEC Approved Registration

Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4

Career Path: A/L or NVQ 4 → University College: NVQ 5 / Diploma → NVQ 6 / HND → NVQ 7 / Degree

For Application Form & more details please visit:
* Our Website:www.ucj.ac.lk
* Telephone: 021-221-7791 or 021-221-7792
* For direct information: University College of Jaffna, No.29, Brown Road, Kokuvil, Jaffna.
* E-mail: asstregistrar@gmail.com

Please pay the Application Fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and attach the bank receipt with Application

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமே என் தேசம், நன்மை செய்தலே என் கொள்கை.

– தாமஸ் பெய்ன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காங்கேசன்துறை - புதுச்சேரி கப்பல் சேவையை உடன் ஆரம்பியுங்கள்

பலாலியில் இருந்து சென்னைக்கும் சென்னையில் இருந்து பலாலிக்குமான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதனால், வடபுலத்து மக்கள் மிகுந்த நன்மையடைந்துள்ளனர்.

இன்னும் இந்த சேவை விரிவுபடுத்தப்படுவதுடன் பலாலி விமான நிலையப் பணியாளர்களாக தமிழ் இளைஞர்களை உள்ளீர்க்க வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

இவை ஒருபுறமிருக்க, ஏலவே தீர்மானிக்கப்பட்டிருந்த காங்கேசன்துறைக்கும் புதுச்சேரிக்குமிடையிலான கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பது தான் நம் கோரிக்கை.

ஆம், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஒட்டுமொத்த இலங்கை மக்களும் பெரும் பொருளாதாரச் சுமையைத் தாங்கி நிற்கின்றனர்.

அதிலும் ஏழை மக்கள் தமது நாளாந்த சீவியத்துக்காக ஏங்குகின்ற பரிதாப நிலையும் ஏற்பட்டுள்ளது.

இப்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் புலம்பெயர் உறவுகளின் உதவியால், கடும் பொருளாதாரச் சுமைக்கு ஈடுகொடுக்க முடிகின்றது.

ஆனால் புலம்பெயர் உறவுகளின் உதவி என்பது இன்னும் சில வருடங்களில் கணிசமாகக் குறைந்துவிடும்.

உண்மை. நம் புலம்பெயர் உறவுகளின் இருப்பு என்பது அவர்கள் வாழுகின்ற நாட்டின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துவிட்டது.

அவர்களின் பிள்ளைகளும் சந்ததியும் தமிழ் மொழியைப் பேசமுடியாதவர்களாக – ஈழமண்ணில் தமது உறவுகளுடன் பிணைப்பை ஏற்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த நிலையில் நம் மண்ணில் பிறந்து வளர்ந்து புலம்பெயர்ந்தவர்கள் மட்டுமே தங்களின் உறவுகளை நினைந்து உதவி செய்வர்.

மற்றும்படி அவர்களின் பிள்ளைகள் தமிழ் தெரியாத தமிழர்களாக வெளிநாடுகளில் வாழ்வார்களேயன்றி, அவர்களின் நிதி உதவியும் முதலீடும் நம் தாயகத்தை நோக்கியதாக இராது என்பது நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறான சூழ்நிலை தற்போது முகிழ்ப்படைந்துள்ளது.

கால ஓட்டத்தில் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவி முற்றாக நின்றுபோக – நம் மக்கள் எதுவும் செய்ய முடியாத கந்தறுநிலைக்கு ஆளாகிவிடுவர்.

எனவே இப்போது இருக்கின்ற நிலைமை தொடர்ந்தும் இருக்கும் என்று நினையாமல், இப்போதே நம் தாயக மண்ணில் முதலீடுகளும் தொழில் முயற்சிகளும் உற்பத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு காங்கேசன்துறைக்கும் புதுச்சேரிக்குமிடையிலான கப்பல் சேவை மிகவும் உதவியாக இருக்கும் என்பதால், குறித்த கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தேர்தலின் பின் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர்களைக் கொண்ட மீளாய்வு ஆலோசனை சபை ஸ்தாபிக்கப்படும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(அம்பாந்தோட்டை)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பிறகு ஒவ்வொரு கிராமத்துக்கும் இளைஞர்களைக் கொண்ட மீளாய்வு ஆலோசனை சபை ஸ்தாபிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிரதேச சபைக்கும்,அதன் எல்லைக்குட்பட்ட அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இளைஞர் ஆலோசனை சபையொன்று ஸ்தாபிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அண்மைய மக்கள் போராட்ட காலப்பகுதியில் இளைஞர்களுக்கு ஆட்சியில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அதனை நன்வாக்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ஏனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குறித்த ஆலோசனை சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் எனவும் உள்ளூராட்சி சபையின் பணிகள் முறையாக நடைபெறுகின்றதா என ஆராய முடியும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதன் மூலம் பிரதேச சபையில் மோசடி, ஊழல்,இலஞ்சம் ஒழிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கி வரும் வெளிநாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு எமதுநாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சிலர் திருடர்களை பிடிப்பதாக கூறினாலும் எவ்வாறு பிடிப்பது என பிடிக்கும் முறையை கூறுவதாக இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், திருடப்பட்ட வளங்கள் மற்றும் பணத்தை மீட்பதற்கான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி அதனை நிறைவேற்றும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## முட்டை இறக்குமதிக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும்

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ

கால்நடை உற்பத்தி சுகாதார நிறுவனத்திடம் அனுமதி பெற்று முட்டைகளை இறக்குமதி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது முட்டை இறக்குமதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன.

எனினும், கால்நடை உற்பத்தி சுகாதார நிறுவனத்திடம் அனுமதி பெறவேண்டியுள்ளது.

குறித்த அனுமதி அடுத்துவரும் நாட்களில் கிடைக்கபெறும்.

அனுமதி கிடைத்தவுடன் முட்டை இறக்குமதி செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம)

## நாட்டை பேரழிவிலிருந்து மீட்க ஜே.வி.பியால் மாத்திரமே முடியும்

### அநுரகுமார திசாநாயக்க

நாட்டை பேரழிவில் இருந்து மீட்டு எடுக்கும் ஆளுமையும் நோக்கமும் தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமே உள்ளதாக அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

வங்கி மற்றும் நிதித்துறைசார் தொழிற்சங்கங்களுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயலுமையை நன்கு அறிந்து அதற்கு அமைவாக செயற்படுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் அதனையே தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நான்கு படிமுறைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், வாக்கெடுப்பு மாத்திரமே மீதமுள்ள நிலையில், அதனை தடுக்க முடியாதெனவும் அவர் சூளுரைத்தார்.

தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி வழக்கு விசாரணை நடைபெறவுள்ள நிலையில், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதை கடப்பாடாகக் கொண்டுள்ள நீதிமன்றம் தேர்தலை நடத்த வேண்டாம் என தீர்ப்பளிக்காது எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். (ம)

## காணி தகராறு; தம்பதியினர் படுகொலை

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் காணி தகராறு காரணமாக தம்பதியினர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலைச் செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பலாந்தோட்டை - ரிதிகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சில காலமாக நிலவி வந்த காணி தகராறு காரணமாக இந்த கொலை மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 66 வயதுடைய ஆண் மற்றும் 62 வயதுடைய பெண் ஒருவர் எனவும் அவர்கள் இருவரும் திருமணமான தம்பதி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் படுகொலை செய்யப்பட்ட நபரின் 66 வயதுடைய மைத்துனர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த சந்தேக நபர் அம்பலாந்தோட்டை பெலிகலகொட பிரதேசத்தை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் வீட்டிற்குள் புகுந்து கோடரி மற்றும் கத்தியால் தாக்கி இந்த இரட்டை கொலையை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பதவி விலகலை

### அரசியலமைப்பு பேரவைக்கு அறிவிக்கவில்லை

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்துள்ளதாக இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அரசியலமைப்பு பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதன் தலைவர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்த சார்லஸ், சமீபத்தில் ராஜினாமா செய்த நிலையில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக குறைந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய தூதுவர்-டக்ளஸ் சந்திப்பு பல்வேறு விடயங்கள் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் தென்கொரியாவிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் தென்கொரியாவின் துறைசார் தொழில்நுட்ப அனுபவங்களை உள்வாங்குவதற்கும் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையின் கடலுணவுகளை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் சன்தூஸ் வூன் ஜின் ஜிஒன்ங், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 26 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடிய போதே குறித்த விடயங்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், நீர்வேளாண்மை சார் உற்பத்தியில் தென்கொரியாவின் அடைவுகளை பாராட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உயிரியல்சார் தொழில்நுட்பம் மற்றும் கடலுணவுகளை பண்ணை முறையில் இனப்பெருக்கம் செய்வதற்கான தொழில்நுட்பம், போன்றவற்றில் தென்கொரியாவிற்கு இருக்கின்ற அனுபவங்களை உள்வாங்குவதற்கும் பயிற்சி நிலையங்களை இலங்கையில் அமைப்பதற்குமான ஆர்வத்தினை வெளிப்படுத்தினார்.

அதேபோன்று, மீன் உணவுகளை உற்பத்தி செய்தல், கருவாடுகளை உற்பத்தி செய்வதற்கான நவீன தொழில்நுட்ப முறைமைகள், மீன்கள் செறிந்து காணப்படும் பிரதேசங்களை கடற்றொழிலாளர்கள் இலகுவாக அறிந்து கொள்வதற்கான கருவிகளை கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான ஒத்துழைப்புகள் போன்ற கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை விருத்திக்கு சாத்தியமான பல்வேறு விடயங்களை தென்கொரியாவிடம் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான தென்கொரிய தூதுவர், கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிந்தளவு நிறைவேற்றப்படும் என்று தெரிவித்ததுடன் தென்கொரியாவில் இலங்கையர்களுக்கு கடற்றொழில் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் வாய்ப்பின்னை ஏற்படுத்துவதற்கான சாத்திய ங்கள் தொடர்பாக தெரிவித்தார். (4-33)

முல்லைத்தீவில்

# யானைகள் அட்டகாசம் பயிர்கள் நாசம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராம மக்கள் யானைகளினால் தொல்லைகளை எதிர்கொண்டுள்ளனர்.

காடுகள் வழியாகவும் வயல்வெளி ஊடாகவும் கிராமத்திற்குள் வருகை தரும் யானைகள் தென்னை, வாழை உட்பட அனைத்துப் பயிர்களையும் அழித்து வருவதாகவும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கூடுதலான யானை வெடிகளை பெற்றுத் தர வேண்டும் எனவும் கிராம மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதேவேளை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிக்ள் தமது நெல்லினை பாதுகாப்பதற்கு இரவு வேளைகளில் காவல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

யானைகளினால் தமது விவசாயம் அழிவுகளை எதிர்கொண்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இக்கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-350)

# மேய்ச்சல் தரவைகள் அமைத்துத் தாருங்கள்

## கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தென்னியங்குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவை இல்லாமையினால் கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

1500 வரையான கால்நடைகள் இக்கிராமத்தில் உள்ள போதிலும் கடந்த 13 வருடங்களாக மேய்ச்சல் தரவைக்கான நிலம் ஒதுக்கப்படாததன் காரணமாக பயிர்ச்செய்கை காலங்களில் தமது கால்நடைகளை கிராமத்தில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடியினை எதிர்கொள்வதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேய்ச்சல் தரவையை உருவாக்கித் தாருங்கள் என அதிகாரிகளிடம் பல ஆண்டுகளாக கோரிக்கைகள் விடுத்தும் தமது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்தனர். (4-6-350)

# ஈழம் கோரி ஆயுதம் ஏந்திப் போராடவில்லை பிள்ளைகளைத் தேடியே போராடுகின்றோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(முறிகண்டி)

உறவுகளைத் தேடி போராடி வரும் ஜெனிற்றாவிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை கண்டிக்கிறோம் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி கலாரஞ்சினி தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கச் செயலாளர் சி.ஜெனிற்றாவின் வீட்டிற்கு கடந்த 26 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் சென்ற சிலர் கழிவு ஒயில் வீசியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தையும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவிக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையும் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

அரச புலனாய்வாளர்கள் இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்வதை கண்டிப்பதாக தெரிவித்த அவர், நாங்கள் ஆயுதம் ஏந்தி ஈழம் கோரி போராடவில்லை. எமது பிள்ளைகளைத் தேடியே போராடுகின்றோம்.

இலங்கை அரசிடம் நீதிகேட்டு போராடினோம். நீதி கிடைக்காமையால் சர்வதேசத்திடம் நீதி கேட்டு போராடுகின்றோம். நிச்சயமாக இலங்கை அரசு தண்டிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-100)

# கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தி மாணவன் மாவட்டத்தில் முதலிடம்



(கிளிநொச்சி)

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவன் ஜோ.பிறோன்சன் 178 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்துள்ளார். (4)

# சுதந்திர தினத்தன்று போராட்டம்; ஆதரவு கோரி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நான்காம் திகதியை கரிநாளாக பிரகடனப்படுத்தி தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் அண்மையில் யாழ். மாவட்டத்தில் சிவில் அமைப்புக்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலினை தொடர்ந்து நேற்று முன்தினம் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் உள்ள மதகுருமார், சிவில் அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலத ரப்பினரைச் சந்தித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடினர்.

அவர்கள் தமது போராட்டத்திற்கான அழைப்புக்களை கோரிய நிலையில் வவுனியா மாவட்ட சிவில் அமைப்புக்கள், மதகுருமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவுகளை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மாணவர் ஒன்றியத்தினரால் போராட்டம் தொடர்பான ஆதரவு கோரிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (4-104)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 360 | 350 |
| தக்காளி | 250 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 |
| கோவா | 80 | 60 | 100 |
| கரட் | 200 | 160 | 200 |
| பூசணி | 80 | 100 | 100 |
| புடோல் | 250 | 180 | 180 |
| வாழைக்காய் | 240 | 240 | 140 |
| சின்ன வெங்காயம் | 550 | 500 | 600 |
| பெரிய வெங்காயம் | 170 | 160 | 150 |
| பாகற்காய் | 250 | 400 | 280 |
| வெண்டிக்காய் | 280 | 350 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 180 | 160 | 300 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 300 | 250 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 30 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 80 |
| இராசவள்ளி | 250 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 320 | 280 | 300 |
| முள்ளங்கி | 40 | 60 | 180 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 |
| வல்லாரை | 50 | 30 | 50 |
| ஈரப்பலா | 100 | 160 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் ஆணைக்...

பத்திரன மற்றும் திவரத்ன ஆகியோருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொலை மிரட்டல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## வடக்கில்...

திகதிக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டுள்ள 100 ஏக்கர் காணி உரிய மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த காணி விடுவிப்பு இடம் பெறுவதுடன், நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு தரப்புகளின் பயன்பாட்டில் மேலும் மக்கள் காணிகள் இருப்பின் அவற்றையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (ம)

## நாட்டில்...

என்று சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து கூறுகிறது. எனக்குத் தெரிந்தவரை, இவை சர்வதேச நாணய நிதியம் பணியாளர் நிலை ஒப்பந்தத்தில் உள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சில சலுகைகளைப் பெறுவதற்கு நாம் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.(ம)

## நாடு நெருக்கடி...

அநுராதபுரத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

2022 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11% ஆக காணப்பட்டதாகவும் இவ்வருடம் அது 3.5% அல்லது 4.0% வரை குறைவடையலாம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் 2024ஆம் ஆண்டு முதல் இதனை நேர்மறையான வளர்ச்சிக்கு கொண்டு செல்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை எந்த வகையிலும் சீர்குலைத்தால் நாடு கடந்த மே மற்றும் ஜூன் மாதம் போன்ற நெருக்கடிக்குள் சிக்குவதை தடுக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார மற்றும் விவசாய வேலைத்திட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின்படி நாடுகளுடன் இணைந்து செயற்படுத்தப்படும். கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் இவ்வாறு சீர்குலைக்கப்படலாம் என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## எரிமலைபோல்...

கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரகார நடவடிக்கைகளை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் அமுல்படுத்திய தவறான பொருளாதார கொள்கையை தற்போதும் அமுல்படுத்துகிறார். நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதார கொள்கையை 69 இலட்ச மக்கள் புறக்கணித்து 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

வரி அதிகரிப்பு, கடன் பெறல் மற்றும் மிகுதியாக இருக்கும் தேசிய வளங்களை விற்றல் ஆகியன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது.

அரசாங்கத்தின் வரி சீர்திருத்தங்களினால் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ரணில் - ராஜபக்ஷர்களினால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

பொருளாதார பாதிப்பு வெகுவிரைவில் எரிமலை போல் வெடிக்கும். பலவீனமான அரசாங்கத்தை மாற்றியமைத்தால்தான் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் அரசாங்கத்தின் முடிவு ஆரம்பமாகும் என்றார்.(ம)

## ராஜபக்ஷ...

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷர்கள் தோல்வியடைவதற்கு குடும்ப ஆட்சி பிரதான காரணமாக அமைந்தது. ஆகவே 2019 ஆம் ஆண்டுக்கு பிறகு பாடம் கற்றுக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்த்தோம். இருப்பினும் எமது நிலைப்பாடு இறுதியில் தவறானது.

2020ஆம் ஆண்டுக்கு பின்னர் அமைச்சரவையில் ராஜபக்ஷர்கள் தான் அதிக ஆதிக்கம் கொண்டிருந்தார்கள். சிரேஷ்ட அமைச்சர்கள் ராஜபக்ஷர்களின் இளவரசரான நாமல் ராஜபக்ஷவிடம் ஆலோசனை பெற வேண்டிய சூழலை கோட்டாபய ராஜபக்ஷ ஏற்படுத்தினார்.

அமைச்சரவையில் பொருளாதார துறைசார் நிபுணர்கள் அங்கம் வகித்த போதும் நிதி நிலைமை தொடர்பில் அடிப்படை தகைமை கூட இல்லாத பஷில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதுடன் 55 அரச திணைக் களங்கள் அனைத்தும் அவரது பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது.

ராஜபக்ஷர்கள் அமைச்சரவையை முழுமையாக ஆக்கிரமித்தமை தொடர்பில் வாராந்தம் இடம் பெறும் கட்சி தலைவர் கூட்டம் இரத்து செய்யப்பட்டது. அமைச்சரவை கூட்டம் ராஜபக்ஷர்களின் குடும்ப உறுப்பினர்களின் இரவு விருந்து உபசாரத்தின் ஊடாக எடுக்கப்பட்டது.

தவறான பொருளாதார தீர்மானங்கள் முழு நாட்டையும் சீரழிக்கும் என நாங்கள் எடுத்துரைத்ததை தொடர்ந்து நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ தனது சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முறையிட்டார். சகோதரரின் தவறான ஆலோசனைகளை கேட்டு கோட்டாபய ராஜபக்ஷ எங்களை பதவி நீக்கினார். எம்மை பதவி நீக்கி விட்டு மூன்று மாதத்திற்கு பின்னர் நாட்டை விட்டு தப்பிச் செல்லும் நிலை அவருக்கு ஏற்பட்டது.

ராஜபக்ஷர்களின் குடும்ப ஆதிக்கத்தினால் 69 இலட்ச மக்களின் அரசியல் தீர்மானம் சூனியமாக்கப்பட்டது. போராட்டத்தின் ஊடாக ராஜபக்ஷர்களை மக்கள் புறக்கணித்தார்கள், ஆனால் ராஜபக்ஷர்களை பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

ராஜபக்ஷர்களின் தவறான பொருளாதார கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகிறார். மக்கள் படும் துயரத்தை அவர் கண்டு கொள்ளவில்லை, ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்ல, தேர்தலை நடத்தினால் படு தோல்வி அடைய நேரிடும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால் தான் தேர்தலை பிற்போட சூழ்ச்சி செய்கிறார். கௌரவமான முறையில் செயற்பட்டால் இறுதி காலத்தை கௌரவமாக கழிக்கலாம் என்றார். (ம)

## ஆதரவையும்...

ஹிஸைன் பிரஹிம் தாஹாவை சந்தித்தபோது, உறுப்பு நாடுகளிடம் இருந்து மனிதாபிமான மற்றும் பொருளாதார ஆதரவை அமைச்சர் சப்ரி கோரியுள்ளார்.

இந்தநிலையில் பெரும்பான்மையான பௌத்த நாடாக இருந்தாலும், இஸ்லாமிய உலகத்துடனான இலங்கையின் உறவுகள் நீண்ட காலமாக தொடர்வதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1469
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 4 8 9 9 8 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1044
B 02 32 43 48
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 3256
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
I 04 06 29 62
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1362
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
S 03 41 43 48 49

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 323
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 12 16 40 47 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/28
சீட்டிழுப்பு இலக்கம் 5014
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 2 7 5 1 4 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1989 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.01.28 தினம் சனிக்கிழமை
X 13 48 62 69
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,418,800/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.28
சீட்டிழுப்பு இல : 4150
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,366,180/-
வெற்றி இலக்கங்கள்
24 57 60 71 C
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,406,704/-
வெற்றி இலக்கங்கள் 10 25 28 60 சிம்மம்
திகதி 2023-01-28
வெற்றி வாரம் 3701
வர்ணம் இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,200,040/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 34 06 07 41 60
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1165
வர்ணம் சிவப்பு
திகதி 2023.01.28 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 301,618,072.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 566 திகதி 2023-01-28 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 14 19 49
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 16,538,612/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1815
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.01.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,709,480/-.
வெற்றி இலக்கங்கள்
11 13 23 51 E
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரி கடித்ததில் வர்த்தகர் மரணம்

(சிலாபம்)

சிலாபத்தில் வீட்டிற்குள் புகுந்த கீரி கடித்ததில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த நபர் வீட்டிற்குள் புகுந்த கீரி ஒன்றை விரட்ட முற்பட்ட போது, குறித்த கீரி அவரது கால் விரலை கடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ம)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(14288)

## ஆசிரியர் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்காக (தரம் 6 - 11 வரை)

- கணிதம்
- விஞ்ஞானம் 077 834 3666

**Zoom Class**

10-11 இந்துரிய வரலாறு - S.B.Sanu

**077 834 3666**

(14426)

## MTC Group and Personal Classes

தமிழ் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தரம் 6 - 11 வரை

தரம் 6 மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள்

ஆரம்பம் : 05.02.2023 ஞாயிறு பிற்பகல் 1.00 pm

நிர்வாகி : R.Mohan

பழனியாண்டவர் கோவிலடி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. (14407)

**077 045 9855, 074 130 1637**

## தீபம் கல்வி நிலையம்

**THEEBAM EDUCATION CENTRE**

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)

புதிய கல்வியாண்டு - 2023

தரம் 6

- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

ஆரம்பம் 05.02.2023

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களிற்கு வாழ்த்துக்கள்

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

அன்பான பெற்றோர்களே !

- உங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்காக தீபத்துடன் இணைந்து தரம் 06 முதல் O/L , A/L வரை கல்வியைத் தொடருங்கள்.
- அடிப்படை ஆங்கிலம், சிங்களம், ICT வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக நடைபெறும்.
- ஏனைய வகுப்புகளிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 (14424) நிர்வாகி

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை.

**076 126 6682**

(14442)

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி, தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் அருகாமையில் அமைந்துள்ள எட்டுப் பரப்பு காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும்.

**கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைக்க சிறந்த இடம்**

(14428)

**075 077 4745**

## வேலையாள் தேவை

- செய்தி வாசிப்பாளர்
- வீடியோ எடிட்டர்
- நிகழ்ச்சி தொகுப்பாளர்

**077 789 2477**

(14442)

## உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2023

| | |
|---|---|
| இடம் | : மெமோறியல் ஆங்கில பாடசாலை. மானிப்பாய் |
| காலம் | : எதிர்வரும் 11.02.2023 (சனிக்கிழமை) |
| நேரம் | : பி.ப 5.00 மணி |
| விடயங்கள் | : • புதிய யாப்பு பிரகடனம் • புதிய நிர்வாகசபை தெரிவு செய்தல் |

மேற்படி கூட்டத்தில் பழைய, புதிய அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

K.R. வசி
செயலாளர்.
உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம்.

(14437)

## தேவை

சிட்டை எழுதுநர்
விற்பனையாளர்

அனுபவம் உள்ள அனுபவம் அற்ற ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

**021 222 2783**

(14440)

## வேலையாட்கள் தேவை

பூநகரியில் இயங்கிக் கொண்டிருக்கும் ரெஸ்ரோரன்ற் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- BAR MAN
- Cook
- Waiter

அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 675 8732, 076 627 4842**

(14436)

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**

மல்லாகம் | கொக்குவில்

தரம் - 06

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(14363) நிர்வாகி

## வீடு வாடகைக்குண்டு

நாவற்குழி A9 வீதியில் சோழாஸ் சிற்பகலைகத்திற்கு பின்னால் உள்ள இரண்டு அறை, கோல் குசினி, பாத்ரூம், 2 டொயிலற் உடன் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு (14431)

**077 771 1071**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள் மற்றும் பெயின்ரர் தேவை.

தொடர்புக்கு : (C-5862)

**077 777 0969**
**077 592 5371**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4

**வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், வீடுகள் அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.**

- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு (14434)

**076 690 6272**

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

**"Water Proofing"**

உங்கள் கட்டடச் சுவர்களில் ஏற்படும் நீர்க்கசிவு மற்றும் சுவர் பூச்சுக்களில் ஏற்படும் பாதிப்புக்களை எங்களிடம் இரசாயனப் பொருட்களைப் பெற்று நீங்களே சீர் செய்து கொள்ளலாம்.

விசேட விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

எம் நிறுவனம் மூலம் செய்பவர்களுக்கு 10 வருட உத்தரவாதம் வழங்கப்படும்

FINEX

(14435) ஏக விநியோகஸ்தர்கள்

**North & East Engineering**

55, stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

நேரடி & ZOOM

**A/L 2023, A/L 2024**

**கணக்கீடு**
(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)

**Mr . BAL AKAJEN**

சாதித்தவர்களை கேளுங்கள்...
சாதனைக்கான வழியை...

**KBK ACCOUNTING COLLEGE**

- பலாலி வீதி, கந்தர்மடம். 077 216 8884
- சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. - Whatsapp - 077 452 0043

(14406)

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)

இல.53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
**077 798 9830** By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.